தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

4.03.2013 A.M

## மேட்டூர் அணையில் நீர் திறப்பு குறைப்பு

மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு ஞாயிற்றுக்கிழமை வினாடிக்கு 300 கன அடியாக குறைக்கப்பட்டது.

மேட்டூர் அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக வினாடிக்கு 600 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது.

கடந்த மாதம் 27-ஆம் தேதி அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 6 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது. இதனால், 33.99 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வந்தது. இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் தண்ணீர் திறப்பு வினாடிக்கு 300 கன அடியாக குறைக்கப்பட்டது. அணையின் நீர்மட்டம் 29.46 அடியாக உள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை அணைக்கு வினாடிக்கு 268 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

## சிறுவாணி அணையில் கூடுதல் நீர் பெற 8-ல் தமிழக- கேரள அதிகாரிகள் பேச்சு

சிறுவாணி அணையின் நீர்மட்டம் மிகக் குறைந்துள்ளதால் வரும் மார்ச் 25-ஆம் தேதி வரை மட்டுமே குடிநீர் கிடைக்கும். அணையில் இருந்து கூடுதல் நீரை எடுப்பதற்காக வரும் 8-ஆம் தேதி தமிழக, கேரள மாநில குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளின் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

கோவை மாநகராட்சியின் 100 வார்டுகளில் குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இதில் பழைய மாநகராட்சிப் பகுதியில் உள்ள வார்டுகளில் 12 வார்டுகள் மட்டும் சிறுவாணி அணையின் தண்ணீரை முழுமையாக நம்பியுள்ளன.

சிறுவாணி அணையில் இருந்து தினமும் 80 எம்.எல்.டி. தண்ணீர் பெறுவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி 28.30 எம்.எல்.டி. தண்ணீர் மட்டுமே எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சிறுவாணி அணையின் நீர்மட்டம்

ஞாயிற்றுக்கிழமை கடல் மட்டத்திலிருந்து 864.26 அடியாக இருந்தது. அணையில் இருந்து மொத்தம் 28.30 எம்.எல்.டி. தண்ணீர் மட்டும் பெறப்பட்டது.

இப்போதைய சூழ்நிலையில் வரும் மார்ச் 25-ஆம் தேதி வரை மட்டுமே நீரை எடுக்க முடியும். அதன்பிறகு என்ன செய்வது என்ற கேள்வி எழுந்துள்ளது.

அணையில் இருந்து நீர் முழுவதும் எடுத்த பிறகு கீழ் பகுதியில் இருந்தும் தண்ணீர் எடுக்க முடியும். ஆனால் அதற்கு கேரள குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளின் ஒப்புதல் தேவை. இந்தச் சூழ்நிலையில் அணையின் கீழ்ப்பகுதியில் இருக்கும் தண்ணீரை எடுப்பதற்காக கேரள குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த தமிழக அதிகாரிகள் முயற்சிகள் மேற்கொண்டனர். வரும் 8-ஆம் தேதி இதற்கான பேச்சுவார்த்தை நடக்க உள்ளதாக மாநகராட்சி மற்றும் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வறட்சி: தீவனத்துக்கு அலையும் கால்நடைகள்



பண்ருட்டி சுற்றுவட்டப் பகுதியில் வறட்சிக் காரணமாக மேய்ச்சல் நிலங்கள் கட்டாந்தரையாக காணப்படுவதால் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகள் தீவனம் கிடைக்காமல், காய்ந்த சருகு மற்றும் பச்சையாக உள்ள உண்ண தகுதியற்ற இலைகளை சாப்பிடும் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

சுனாமி, தானே புயல் என கடுமையான இயற்கைச் சீற்றத்தால் அவ்வப்போது கடலூர் மாவட்டம் பாதிக்கப்பட்டு வருகிறது. விவசாயத்தையும் அதை சார்ந்த தொழிலையுமே நம்பியுள்ள விவசாயிகள், இயற்கையின் தட்பவெப்ப நிலையின் மாற்றத்தால் ஒவ்வொரு ஆண்டும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

30.12.11 அன்று வீசிய தானே புயலுக்குப் பின்னர் கடலூர் மாவட்டத்தில் மழை பொய்த்துவிட்டது. வெப்பத்தின் தாக்கம் அதிகரித்துவிட்டது. பல பகுதிகளில் ஆறு, குளம், ஏரிகள் வறண்டு போய்விட்டன.

மும்முனை மின்சாரமும் முறையாக கிடைக்காத நிலையில் விவசாய விளை நிலங்கள் மனைப் பிரிவுகளாக மாறி வருகின்றன.

மின்சாரம், ஆள் பற்றாக்குறை கூலி உயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணத்தினால் பயிர் சாகுபடி தடைபட்டதாலும், தீவனம் விலை உயர்வாலும் கால்நடைகளைப் பராமரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

பண்ருட்டி மற்றும் நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமப் பகுதியில் வறட்சியின் காரணமாக நிலங்கள் கட்டாந்தரைகளாக மாறிவிட்டன.

கடும் வெப்பத்தால், நிலங்களில் வெடிப்புகள் ஏற்பட்டுக் காய்ந்து கிடக்கின்றன. நீர் நிலைகளில் தண்ணீர் கூட இல்லை.

இதனால் மேய்ச்சலுக்கு வரும் கால்நடைகள் காய்ந்து போன சரகுகளையும், உண்ண தகுதியற்ற வேப்பம், முந்திரி இலைகளை சாப்பிடக் கூடிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

கால்நடைகளைப் பராமரிப்பதில் சிக்கல் எழுந்துள்ளதால், அதன் உரிமையாளர்கள் வந்த விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர். இதனால் சாதாரண குடிமகன், சிறு மற்றும் குறு விவசாயிகள், நிலமற்ற கூலித் தொழிலாளர்கள், குடிசைவாசிகள் ஆகியோர் வருவாய் இழப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## நீர் சிக்கனம்: விவசாயிகளுக்குப் பயிற்சி

கோவில்பட்டியையடுத்த மீனாட்சிபுரத்தில் வேளாண்மைத் துறை சார்பில் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

இப்பயிற்சியை கோவில்பட்டி வேளாண்மை உதவி இயக்குநர் கருப்பசாமி தொடங்கி வைத்தார். மாற்று மேலாண்மைக்கான சிறப்பு தகுதி மையத்தைச் சேர்ந்த பயிற்றுநர்கள் கார்முகிலன், நடராஜன் ஆகியோர் நீர் சிக்கனம் குறித்து பயிற்சியளித்து செயல்விளக்கங்களை செய்துகாட்டினர். கோவில்பட்டி தரக் கட்டுப்பாடு வேளாண்மை அலுவலர் பாலமுருகன் பயறு வகைப் பயிர்கள் சாகுபடி பற்றி பேசினார். மீனாட்சிபுரம் கிராமத் தலைவர் ஆசைத்தம்பி, கிராம மக்களிடம் நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி, நல்ல சுகாதாரமான சூழ்நிலையை ஏற்படுத்தி, மீனாட்சிபுரம் கிராமத்தை முன்மாதிரி கிராமமாக உருவாக்கப் போவதாக உறுதி அளித்தார். இதில், நூற்றுக்கும் மேற்பட்ட அப்பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை கோவில்பட்டி துணை வேளாண்மை அலுவலர் மாசானன், உதவி வேளாண்மை அலுவலர்கள் செந்தில்குமார், கபில்ராஜ் மற்றும் அட்மா திட்ட பயிற்சியாளர்கள் செய்திருந்தனர்.

## 50 சதவீத மானியத்தில் தீவன சோளப்பயிர் வளர்க்க விவசாயிகளுக்கு அழைப்பு

திருவாரூர் மாவட்டத்தில் 50 சதவீத மானியத்தில் தீவன சோளப் பயிர் பயிரிட விவசாயிகள் முன்வரலாம் எனத் தெரிவித்துள்ளார் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழகத்தில் கால்நடைகளுக்கு வழங்கப்படும் தீவனத்தில் வைக்கோல் முக்கியப் பங்கு வகிக்கிறது. டெல்டா மாவட்ட ங்களில் பாரம்பரியமாக நெல் பயிரிடப்பட்டு வைக்கோல் முக்கிய உலர் தீவனமாக பயன்படுத்தப்படுகிறது.

தற்போது நிலவி வரும் வறட்சியான சூழ்நிலையில் தேவைக்கும், உற்பத்திக்கும் மிகப் பெரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது. இச்சூழலை சமாளிக்க காவிரி டெல்டா மாவட்டங் களான திருச்சி, திருவாரூர், நாகை உள்ளிட்ட 8 மாவட்டங்களில் தீவன சோளப்பயிர் பயிரிட ரூ. 15 கோடி நிதி ஒதுக்கியுள்ளார் முதல்வர் ஜெயலலிதா.

திருவாரூர் மாவட்டத்தில் 700 ஏக்கரில் தீவன சோளப்பயிர் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கரில் தீவன சோளப்பயிர் சாகுபடிக்கு ஆகும் மொத்த செலவில் 50 சதவீதம் மானியத் தொகையாக உற்பத்தியாளருக்கு வழங்கப்படுகிறது. ஒரு பயனாளி குறைந்தப் பட்சம் அரை ஏக்கர் பயிரிட வேண்டும். நீர்ப்பாசன வசதி அவசியம் இருக்க வேண்டும். ஏக்கரில் சுமார் 10 டன் தீவனம் கிடைக்கும்.

உற்பத்தி செய்யப்பட்ட தீவன சோளப்பயிரை தங்களது தேவைக்கு போக மீதமுள்ளவ ற்றை கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் மூலம் அதன் உறுப்பினர்களுக்கு விற்ப னை செய்ய வேண்டும். தீவனப்பயிர் உற்பத்தி செய்த பயனாளியிடமிருந்து வாங்கி அதனை 50 சதவீத மானியத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர் களுக்கு வழங்கப்படும்.

எனவே நீர்ப்பாசன வசதியுடன் நிலம் உள்ள விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம். விரும்புவோர் அருகிலுள்ள கால்நடை மருந்தகங்களை அணுகி விண்ணபித் துப் பயன்பெறலாம். திருவாரூர் மாவட்டத்துக்கு ரூ. 47.6 லட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. ஏக்கருக்கு மானியமாக ரூ. 6,440 வழங்கப்படுகிறது.

## வறட்சி நிவாரணக் கணக்கெடுப்பை அரசு மறு பரிசீலினை செய்யக் கோரிக்கை

பாதிக்கப்பட்ட விவசாயிகள் முழுமையாகப் பயனடையும் வகையில் வறட்சி நிவாரணத்தையும், நிவாரணத்துக்கான கணக்கெடுப்பையும் அரசு மறு பரிசீலினை செய்ய வேண்டும் என டெல்டா மாவட்ட விவசாய சங்கங்களின் கூட்டமைப்புக் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் ஆறுபாதி பி. கல்யாணம், தமிழக முதல்வருக்கு அனுப்பிய கோரிக்கை மனுவின் விவரம் :

காவிரி பாசனப் பகுதிகளில் 11 லட்சம் ஏக்கர் பரப்பிலான நெல் சாகுபடி கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இதன் மூலம் சுமார் 5.45 லட்சம் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், 50 சதவீதத்துக்கும் அதிக பாதிப்புக்குள்ளான 3.61 லட்சம் ஏக்கருக்கு மட்டுமே (உடனடி) நிவாரணம் எனவும், 5.45 லட்சம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 1.75 லட்சம் விவசாயிகளுக்கு மட்டுமே இந்த நிவாரணம் எனவும் அரசு அறிவித்திருப்பது விவசாயிகளுக்கு வேதனையையே ஏற்படுத்தியுள்ளது.

மாவட்ட நிர்வாகங்கள், வேளாண் துறையினர் முழுமையாக ஆய்வு செய்யாமல் அரசுக்கு தவறான அறிக்கை அனுப்பியதே இந்தப் பிரச்னைகளுக்குக் காரணம். முன்னோடி விவசாயிகளை இணைத்து கிராமம் வாரியாக ஆய்வு மேற்கொள்ளாமல், மேசை கணக்கு அடிப்படையில் அரசுத் துறையினர் தயாரித்த அறிக்கையே அரசின் நோக்கத்தையும், விவசாயிகளின் மகிழ்ச்சியையும் சிதைத்துள்ளதாகத் தெரிகிறது.

ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு விவசாயிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. பின்னர், பயிர்க் காப்பீடு இழப்பீட்டையும் இணைத்தே ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் நிவாரணம் என்ற செயலாக்கம் விவசாயிகளிடையே அதிர்ச்சியையே ஏற்படுத்தியுள்ளது. பயிர்க் காப்பீடு இழப்பீட்டையும், பேரிடர் நிவாரணத் தொகையையும் இணைத்து அளிக்கும் தொகை எந்த வகையிலும் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக இருக்காது.

நாகை மாவட்டம், மயிலாடுதுறை கோட்டத்தில் 1.7 லட்சம் ஏக்கர் பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சாகுபடியில் சுமார் 1.53 லட்சம் ஏக்கர் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ள நிலையில், 49 ஆயிரம் ஏக்கருக்கு மட்டும் நிவாரணம் என மாவட்ட நிர்வாகம் அறிவித்திருப்பது விவசாயிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது போன்ற நிலையே பிற டெல்டா மாவட்டங்களிலும் நிலவுகிறது.

தமிழக அரசின் நிவாரண அறிவிப்பில் டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த 1.75 லட்சம்

விவசாயிகளுக்கு ரூ. 541.5 கோடி நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், தற்போது பரவலாக விவசாயிகளை சமாதானப்படுத்தும் வகையில், 1.75 லட்சம் விவசாயிகளுக்கான நிவாரணத் தொகையை 2.47 லட்சம் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்க மாவட்ட நிர்வாகங்கள் முனைப்புக் காட்டுவது அரசாணைக்கு எதிரானது.

மாவட்ட நிர்வாகங்களின் இந்த சமாதான முடிவு மூலம், ஏற்கெனவே மாவட்ட நிர்வாகங்கள் அரசுக்கு அளித்த வறட்சி பாதிப்பு கணக்கெடுப்புப் புள்ளிவிவரங்கள் தவறானது என்பதை அனைவரும் அறிய முடிகிறது.

ஒரு ஏக்கர் நெல் சாகுபடிக்கு சுமார் ரூ. 20 ஆயிரம் வரை செலவு செய்யப்படும் நிலையில், பயிர்க் காப்பீடு இழப்பீட்டையும், பேரிடர் நிவாரணத்தையும் இணைத்து, மிகக் குறைந்த பரப்புக்கு வழங்கப்படும் வறட்சி நிவாரணம் விவசாயிகளுக்கு வேதனையை அதிகப்படுத்தியுள்ளதே தவிர, மகிழ்ச்சி ஏதுமில்லை.

எனவே, தமிழக அரசு உரிய பரிசீலினை மேற்கொண்டு, பயிர்க் காப்பீட்டு இழப்பீட்டை விவசாயிகளே பெற்றுக் கொள்ளும் வகையில் நிவாரணத் தொகுப்பை மாற்றியமைக்கவும், வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒரு விவசாயி கூட விடுப்படாமல் அனைவரும் பயன் பெறும் வகையில் விரிவான நிவாரணத்துக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தக் கோரிக்கை மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### மேட்டூர் அணை நீர்மட்டம் 29.44 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்று கிழமை மாலை 29.44 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 138 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 300 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

### மேட்டூர் அணையில் நீர் திறப்பு குறைப்பு

மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு ஞாயிற்றுக்கிழமை வினாடிக்கு 300 கன அடியாக குறைக்கப்பட்டது.

மேட்டூர் அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக வினாடிக்கு 600 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது.

கடந்த மாதம் 27-ஆம் தேதி அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 6 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது. இதனால், 33.99 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வந்தது.

காவிரி டெல்டா பாகுதிகளில் சம்பா நெல் சாகுபடி நிறைவடைந்த நிலையில், தண்ணீர் திறப்பை அதிகரித்ததற்கான காரணத்தை பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவிக்க மறுத்து வந்தனர்.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் தண்ணீர் திறப்பு வினாடிக்கு 300 கன அடியாக குறைக்கப்பட்டது. அணையின் நீர்மட்டம் 29.46 அடியாக உள்ளது. கடந்த நான்கு நாள்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 4.53 அடி குறைந்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 268 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர்இருப்பு 7.31 டி.எம்.சியாக உள்ளது.

மரக் கன்றுகள் நடும் பணி தொடக்கம்தருமபுரி,மார்ச் 3: தருமபுரி மாவட்டம், பாளையம்புதூரில் அன்னை சோனியா சமூக சேவை மையம் சார்பில் ஞாயிற்றுக்கிழமை ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் பணி தொடங்கியது.

தருமபுரி சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் டி.என்.வி.வடிவேல் கவுண்டரின் நினைவு நாளை முன்னிட்டு, அன்னை சோனியாகாந்தி சமூக சேவை மையத்தின் சார்பில், தருமபுரியை அடுத்த பாளையம்புதூர் கிராமத்தில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் பணி தொடங்கியது. தியாகி பி.பி.வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், தருமபுரியைச் சேர்ந்த தொழில் அதிபர் டி.என்.வி.வினோபாஜ்ராஜ், சமூக சேவை மையத்தின் நிறுவனத் தலைவர் தலைவர் வி.ஹரிகிருஷ்ணன், அரசு மாணவர் விடுதி காப்பாளர் குமரவேல் மற்றும் விடுதி மாணவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### மார்ச் இறுதிக்குள் கடன்களை வழங்க வேண்டும்

திருவண்ணாமலை மாவட்ட வங்கிகள் பயிர்க்கடன், நெசவாளர் கடன், புதுவாழ்வுத் திட்ட கடன், தாட்கோ மூலம் வழங்கப்படும் கடன்களை மார்ச் இறுதிக்குள் வழங்க வேண்டும் என்று வங்கியாளர்களுக்கு ஆட்சியர் விஜய் பிங்ளே உத்தரவிட்டுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட அளவிலான வங்கியாளர்களின் ஆய்வுக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்த ஆட்சியர் விஜய் பிங்ளே, மகளிர் திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கியது, புதுவாழ்வுத் திட்டத்தின் கீழ் 39 கடன் திட்டங்களில் 36 திட்டங்களுக்கு ரூ.11 கோடியே 11 லட்சத்து 66 ஆயிரம் கடன்கள் வழங்கப்பட்டதையும், நிலுவையில் உள்ள கல்விக் கடன்கள் குறித்தும் ஆய்வு செய்தார்.

தாட்கோ மூலம் வழங்கப்பட்ட தொழில் முதலீட்டாளர்கள் சுயதொழில் தொடங்குவதற்கான கடனுதவிகள், பட்டு வளர்ச்சிக்கு வங்கிகள் மூலம் வழங்கப்படும் கடனுதவிகள், பயிர் காப்பீட்டுத் திட்டத்துக்கான கடனுதவிகள் குறித்தும், நிலுவையில் உள்ள கடன் மனுக்கள் குறித்தும் ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, பயிர்க் கடன், நெசவாளர் கடன், புதுவாழ்வுத் திட்ட கடன்கள், தாட்கோ மூலம் வழங்கப்படும் கடனுதவிகளை மார்ச் மாத இறுதிக்குள் வழங்க வேண்டும் வங்கியாளர்களுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

கூட்டத்தில், சென்னை ரிசர்வ் வங்கியின் உதவிப் பொது மேலாளர் ஜெ.கந்தசாமி, நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் எஸ்.டி.சுதர்சன், இந்தியன வங்கியின் மண்டல மேலாளர் செல்வசேகரன், இந்தியன் முன்னோடி வங்கி மாவடட மேலாளர் சேகர், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) சந்திரசேகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**"பாணாவரத்தில் நெல் கொள்முதல் நிலையம் வேண்டும்'**

பாணாவரத்தில் தமிழக அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்று பாமக கோரிக்கை விடுத்துள்ளது.

அரக்கோணத்தை அடுத்த பாணாவரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சோளிங்கர் தொகுதி பாமக நிர்வாகக்குழு கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்கு காவேரிபாக்கம் ஒன்றியச் செயலர் வி.ராஜீ தலைமை தாங்கினார். முன்னாள் மத்திய அமைச்சர் ஆர்.வேலு, பாமக மாநில துணை பொதுச் செயலர் எம்.கே.முரளி, மாவட்டச் செயலர் க.சரவணன், மாவட்டத் தலைவர் அ.ம.கிருஷ்ணன், மாவட்டப் பொருளாளர் உமாமகேஸ்வரி, மாநில மாணவர் அணி செயலர் ப.பிரபு, மாநில இளைஞர் அணி துணைச் செயலர் ச.தீனதயாளன், தலைமை நிலைய பேச்சாளர் தம்பிஏழுமலை, மாநில வன்னியர் சங்க துணைத் தலைவர் மின்னலான், மாவட்டச் செயலர் ஏழுமலை, சோளிங்கர் ஒன்றியச் செயலர் ஆ.பாபு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மிளகாய் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

திருவாடானை தாலுகா ஆர் எஸ் மங்கலம் பகுதியில் மிளகாய் சந்தையில் இந்த வாரம் நல்ல விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

திருவாடானை தாலுகா ஆர் எஸ் மங்கலம், சனவேலி, மங்களம், வண்டல், வரவணி, செங்குடி போன்ற 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 1200 ஏக்கர் பரப்பளவில் மிளகாய் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இப்பகுதி மிளாகாய் அதிக காரமாக இருப்பதால் வெளிமாவட்டங்களில் அதிக கிராக்கி உண்டு. இன்னிலையில் கடந்த மாதம் ஆர் எஸ் மங்கலம் வாரச்சந்தையில் தொடர் மழை காரணமாக மிளகாய் வத்தல் விலை கடும் விழ்ச்சியில் இருந்த நிலையில், சனிக்கிழமை சந்தையில் 100 கிலோ மிளகாய் வத்தலுக்கு ரூ.2ஆயிரம் வரை உயர்ந்து ரூ.7ஆயிரத்து 500 வரை விற்றது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## மீன் வரத்து குறைவால் விலை உயர்வு

திருவாடானை தாலுகா தொண்டி கடல் பகுதியில் கடந்த சில நாட்களாக கடல் சீற்றமாக இருப்பதால் மீன் வரத்து குறைந்தது. இதனால் மீன் விலை அதிகரித்துள்ளது.

திருவாடானை தாலுகா தொண்டி, எஸ்.பி. பட்டினம், நம்புதாளை, முள்ளிமுனை, காரங்காடு, திருப்பாலைக்குடி கடல் பகுதியில் பல ஆயிரம் பேர் மீன் பிடித்தொழில் செய்து வருகின்றனர்.

மன்னார் வளைகுடாவில் இப்பகுதியில் உள்ள மீன் அதிக ருசியாக இருப்பதால் மக்கள் பெரிதும் விரும்பி சாப்பிடுகின்றனர். இன்னிலையில் கடந்த சில நாட்களாக கடல் அதிக சீற்றமாக இருப்பதால் மீன் வரத்து குறைந்துள்ளது.

இதனால் மீனவர்கள் மீன்களை அதிக விலைக்கு விற்கின்றனர்.

விலை மீன் ரூ.150லிருந்து ரூ.250க்கும் நண்டு ரூ.200லிருந்து ரூ.300க்கும், இரால் ரூ.200லிருந்து ரூ.300க்கும் விற்கப்படுகிறது. இதேபோல் அனைத்துவகை மீன்களும் கிலோ ஒன்றுக்கு ரூ.100 அதிகரித்துள்ளது.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் கொடைக்கானல் மேல்மலை விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடைபெற்றது.

கொய்மலர் சாகுபடி,மண் புழு உரம் தயாரித்தல்,தேனீ வளர்ப்பு குறித்து இரண்டு நாள்கள் இந்தப் பயிற்சி முகாம் நடந்தது.

முகாமுக்கு, தோட்டக்கலை துணை இயக்குநர் ராஜாமுகமது தலைமை வகித்தார். தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத் தலைவர் ராஜாங்கம் முன்னிலை வகித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார். தோட்டக்கலை உதவி இயக்குநர் சின்ராஜ் வரவேற்றார்.

வேளாண் விற்பனைத் துறையைச் சேர்ந்த நாகராஜன், அத்துறையின் திட்டங்களை விளக்கினார். தோட்டக்கலை துணை அலுவலர் எபன்ராஜ் நன்றி கூறினார்.

100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## தேனீ வளர்ப்புக் கருத்தரங்கம்

பழனி அருள்மிகு பழனியாண்டவர் கல்லூரியில், தேனீ வளர்ப்பு குறித்து ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

கல்லூரி வளாகத்தில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மன்றத்தின் நிதி உதவியுடன் நடைபெற்ற இம்முகாமில் தொழில்நுட்பப் பயிற்சிக்கு, ஒருங்கிணைப்பாளர் காண்டீபன் ஏற்பாடு செய்திருந்தார். முதல்வர் (பொறுப்பு) திருமலைசாமி தலைமை வகித்தார். பேராசிரியர் ஜோதீஸ்வரன் வாழ்த்துரை வழங்கினார்.

ராசிபுரம் முத்தையம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி உயிரி தொழில்நுட்பவியல் துறைத் தலைவர் சுரேஷ்குமார், தேனீ வளர்ப்பு குறித்து விளக்கினார். தளவாய்புரம் இயற்கை தேனீ பண்ணை லிம்கா சாதனையாளர் ஜெயக்குமார், இந்திய மற்றும் இத்தாலிய தேனீ வளர்ப்புப் பற்றி செயல்விளக்கம் செய்து காட்டினார். முகாமில், முனைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, ராஜமாணிக்கம், வேலுச்சாமி, தேவராஜ், பேராசிரியர்கள் மனோகரன், மணிகண்டன், ரவிச்சங்கர், அருணாச்சலம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.இணைப் பேராசிரியர் மதிவாணன் நன்றி தெரிவித்தார்.

## வறட்சியின் பிடியில் ஒட்டன்சத்திரம் பகுதி விவசாயிகள்

ஒட்டன்சத்திரம் பகுதியில் கடுமையான வறட்சி நிலவுவதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆழ்குழாய் கிணறுகள் வறண்டு வருவதால், குடிநீர் பஞ்சம் ஏற்படும் அபாயமும் நிலவுகிறது.

ஒட்டன்சத்திரத்தைச் சுற்றியுள்ள தங்கச்சியம்மாபட்டி,கொசவபட்டி,அம்பிளிக்கை, மண்டவாடி, கே.கீரனூர், ஜ.வாடிப்பட்டி, குத்திலுப்பை, அரசப்பபிள்ளைபட்டி,விருப்பாச்சி, சத்திரப்பட்டி, பெரியகோட்டை,வீரலப்பட்டி, கே.அத்திக்கோம்பை, லக்கையன் கோட்டை மற்றும் தொப்பம்பட்டி ஒன்றியத்தில் உள்ள 16-புதூர், தேவத்தூர், போடுவார்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, கொத்தையம்,கள்ளிமந்தையம், பொருளூர்,வாகரை,பூலாம்பட்டி,பூசாரிபட்டி,கரியாம்பட்டி,கூத்தம்பூண்டி உள்பட பல கிராமங்களில் மக்காச்சோளம், தக்காளி, நிலக்கடலை,கத்திரிக்காய், மிளகாய், காளிபிளவர், சின்ன வெங்காயம்,செடி முருங்கை, பீட்ரூட் போன்ற பணப்பயிர்கள் அதிக அளவில் பயிரிடுவது வழக்கம்.

ஆனால், பருவமழை பொய்த்ததால், போதிய நீரின்றி மக்காச் சோளப் பயிர்கள் முற்றிலும் கருகிப் போனது. மேலும், இருக்கிற நீரை வைத்து ஒரு சில விவசாயிகள் நிலக்கடலை,காளிபிளவர், கத்திரிக்காய்,தக்காளி, செடிமுருங்கை போன்ற பணப்பயிர்களை பயிர் செய்தனர்.

நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால் ஆழ்குழாய் மற்றும் கிணறுகளும் வறண்டு வருகின்றன. இதனால் பயிர்களுக்கு, முழுமையாக தண்ணீர் செலுத்த முடியவில்லை. இதனால், இப்பயிர்கள் காய்த்து கருகி வருகின்றன.

தற்போது ஒட்டன்சத்திரத்தைச் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களிலும், ஒவ்வொரு விவசாயியும் தங்களது தோட்டத்தில் சக்திக்கேற்ப குறைந்தபட்சம் 2 முதல் 5 வரை ஆழ்குழாய் கிணறு (போர்வேல்) அமைத்துள்ளனர். சுமார் 500 அடி முதல் 1000 அடி ஆழம் வரை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதனால், நிலத்தடி நீர்மட்டம் மேலும் குறைந்து விட்டது.

குடிநீர் பஞ்சம்: ஒட்டன்சத்திரம் பகுதியில் ஒவ்வொரு ஊராட்சியிலும், பொதுமக்கள் பயன்பாட்டுக்காக ஊராட்சி மூலம் சுமார் 500 முதல் 600 அடி ஆழம் வரை ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டன.

அவையும் தற்போது வறண்டுள்ளதால் 3 அல்லது 4 நாள்களுக்கு ஒருமுறையே குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

வருகிற ஏப்ரல், மே மாதங்களில் கடும் குடிநீர் பஞ்சம் அதிகரிக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இதனால் நிலத்தடி நீரை உறிஞ்சி எடுப்பதை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து 16-புதூரைச் சேர்ந்த விவசாயி செல்லமுத்து கூறுகையில், தமிழக அரசு அனைத்து கிராமங்களிலும் குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## மார்ச் 8-ல் விவசாயிகள் முற்றுகைப் போராட்டம்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் விடுபட்டதைக் கண்டித்து சிதம்பரம் உதவி ஆட்சியர் அலுவலகம் முன்பு மார்ச் 8-ல் முற்றுகைப் போராட்டம் நடத்துவது என விவசாயிகள் சங்கக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் பரங்கிப்பேட்டை வடக்கு ஒன்றிய அமைப்புக் குழுக் கூட்டம் புதுசத்திரத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

விவசாயிகள் சங்க சிதம்பரம் வட்டத் தலைவர் ஜீவா தலைமை வகித்தார். கூட்டத்தில் சிதம்பரம் சட்டப்பேரவை உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன், விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஜி.மாதவன், மாவட்டச் செயலர் ஜி.ஆர்.ரவிச்சந்திரன், கடற்கரையோர மக்கள் வாழ்வுரிமை இயக்க அமைப்பாளர் எஸ்.ஜி. ரமேஷ்பாபு, விவசாயத் தொழிலாளர் சங்கத் தலைவர் பி.கற்பனைச்செல்வம், வட்டச் செயலர் கண்ணன் உள்ளிட்டோர் பேசினர்.

பயிர் நிவாரண கணக்கெடுப்பின்போது வறட்சியால் பாதிக்கப்பட்ட உண்மையான விவசாயிகள் விடுப்பட்டுள்ளதைக் கண்டித்தும், முறையான கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியும் மார்ச் 8-ம் தேதி சிதம்பரம் உதவி ஆட்சியர் அலுவலகம் முன்பு முற்றுகைப் போராட்டம் நடத்துவது.

சைமா டெக்ஸ்டைல்ஸ் பார்க் என்ற பெயரில் பெரியப்பட்டு அருகே அமைக்கப்படவுள்ள சாயத் தொழிற்சாலையால் பாதிக்கப்படும் மக்கள் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க போராட்டம் நடத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

4.03.2013 A.M

## நெல் கொள்முதல் நிலையம் திறப்பு

வேதாரண்யம்: பன்னாள் கிராமத்தில், விவசாயிகள் வசதிக்காக நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில், நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை, எம்.எல்.ஏ., காமராஜ் திறந்து வைத்தார்.நாகை மாவட்டம், வேதாரணம் தாலுக்கா, பன்னாள் கிராமத்தில் நடந்த கொள்முதல் நிலையம் திறப்பு விழாவில், நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மேலாளர் ராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார். கிராம பஞ்சாயத்து தலைவர் விஸ்வநாதன் வரவேற்றார். யூனியன் கவுன்சிலர் ராஜசேகர் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில், வேதாரண்யம் எம்.எல்.ஏ., காமராஜ் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை துவக்கி வைத்தார். கொள்முதல் நிலையத்தில், நெல்லை விற்பனை செய்த முதல் விவசாயிக்கு, அதற்குரிய தொகையை வழங்கி பாராட்டினார். தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் ரவிச்சந்திரன், நுகர்பொருள் வாணிபக்கழக அண்ணா தொழிற்சங்க அமைப்பாளர் முருகு அருணன், அ.தி.மு.க., ஒன்றிய அவைத்தலைவர் பாலகிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதி வீரராசு, பஞ்சாயத்து தலைவர் வீரமணி, முன்னாள் பஞ்சாயத்து தலைவர்கள் தங்கவேல், நடராஜன் உள்பட பலர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## தர்பூசணி' விற்பனை ஜரூர்

சிவகங்கை: சிவகங்கையில், கோடை வெயிலின் தாக்கத்தை தணிக்க, பொதுமக்கள் தர்ப்பூசணி, கரும்புச்சாறு, இளநீரை நாடி வருகின்றனர். கோடையில் கத்திரி வெயிலின் தாக்கம் அதிகரிக்கும். உஷ்ணத்திற்கு அஞ்சும் முதியவர், பெண்கள், சிறுவர்கள் வெளியில் நடமாடவே அஞ்சுவர். இந்த ஆண்டு போதிய மழையின்றி, கோடை வெயிலின் தாக்கம், கடந்த ஆண்டுகளை விட அதிகரித்து வருகின்றன. கோடை உஷ்ணத்தில் இருந்து தங்களை காத்துக்கொள்ள இயற்கை உணவுகளான தர்ப்பூசணி, கறும்புச்சாறு, வெள்ளரிக்காய், இளநீரை அதிகளவில் சாப்பிடுகின்றனர். இதனால், சிவகங்கையில், இவற்றின் விற்பனை ஜரூராக நடந்து வருகிறது.

## கத்தரி, மிளகாயில் நோய் தாக்குதல் கட்டுப்படுத்த யோசனை

சிவகங்கை: ""சாக்கோட்டை ஒன்றியத்தில்,கத்தரி,மிளகாய் பயிரில் நோய் தாக்குதல்,ஏற்பட்டுள்ளதை தடுக்கலாம்," என,தோட்டக்கலை துணை இயக்குனர் இருளப்பன் தெரிவித்தார். அவர் கூறியதாவது: கத்தரியில் தண்டுப்புழு,வாடல் நோய், நூற்புழுக்களின் தாக்குதலும் மற்றும் மிளகாய் பயிரில் ப்யூசோரியம் வாடல் நோயின் தாக்குதல் காணப்பட்டது. புழு தாக்குதலை கட்டுப்படுத்த, ஏக்கருக்கு வேப்பம் புண்ணாக்கு 75 கிலோ மற்றும் கார்போயூரான் ஏக்கருக்கு 4 கிலோ மண்ணில் கலந்து இடவேண்டும். பியூசோரியம் வாடல் நோயை கட்டுப்படுத்த பெவிஸ்டின் 1 கிராமை, ஒரு லிட்டர் நீரில் கலந்து ஊற்ற வேண்டும். இப்பயிர் பாதுகாப்பு மருந்துகளை பயன்படுத்தி, நோய் தாக்குதலில் இருந்து பயிர்களை பாதுகாக்கலாம், என்றார்.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

சாத்தான்குளம்: சாத்தான்குளத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது.சாத்தான்குளம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது.வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராஜ், வட்டார தொழில் நுட்ப மேலாளர் ராஜலெட்சுமி வேளாண்மை பொருட் சிறப்பறிஞர்கள் முத்துமாலை, முருகன், பஞ்., தலைவர் பாலமேனன் உட்பட 22 விவசாயிகள் கலந்துகொண்டனர். ஆழியார்நகர் தென்னை ஆராய்ச்சி நிலையம் உட்பட பல்வேறு தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் செய்துகாட்டடப்பட்டது.

## விவசாயிகள் சங்க ஒன்றியக்குழு கூட்டம்

தூத்துக்குடி: தூத்துக்குடியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க தூத்துக்குடி ஒன்றியக்குழு கூட்டம் நடந்தது.ஒன்றியத் துணை தலைவர் மயிலேரும் பெருமாள் தலைமையில் மாவட்டச் செயலாளர் பெருமாள் கலந்து கொண்டு பேசினார். 2013ம் ஆண்டுக்கான விவசாயிகள் சங்க செயல்பாடு சம்பந்தமான தூத்துக்குடி ஒன்றியச் செயலாளர் சங்கரன் பேசினார். சங்க ஒன்றியப் பொருளாளர் முனியசாமி, ஒன்றிய துணைச் செயலாளர் நயினார், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் மாரிமுத்து, சிவசங்கு, செந்தூர்பாண்டி, முனிராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர். புதிய ஒன்றிய தலைவர்களாக மயிலேரும் பெருமாள், துணை தலைவராக முனிராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## கி.கிரி மாவட்டத்தில் புளி விளைச்சல் அதிகரிப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புளி விளைச்சல் அதிகரித்துள்ளது. அதனால், சந்தைக்கு வரத்து அதிகரித்து, விலை வெகுவாக குறைந்துள்ளது.வெப்பமண்டல பகுதியான, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், உரிகம், பேரிகை, தீர்த்தம், வேப்பனப்பள்ளி, கிருஷ்ணகிரி, மத்தூர், காவேரிப்பட்டணம், பர்கூர், ராயக்கோட்டை, ஊத்தங்கரை ஆகிய சுற்றுவட்டார பகுதிகளில், அதிக அளவில் புளி உற்பத்தி செய்யப்படுகிறது.இங்கு உற்பத்தி செய்யப்படும் புளி, வெளி மாவட்டங்கள் மட்டுமன்றி, இந்தியாவில் உள்ள பல மாநிலங்களுக்கும், விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. மாவட்டத்தில், ஆண்டுக்கு சராசரியாக, பத்தாயிரம் டன்னுக்கு மேல், புளி விளைச்சல் ஆகிறது.

இந்தியாவில், ராஞ்சிக்கு அடுத்தப்படியாக, கிருஷ்ணகிரி பழையபேட்டையில், இரண்டாவது பெரிய புளி சந்தை கூடுகிறது. பொதுவாக, தென் மாநிலங்களில், ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலும், வட மாநிலஙங்களில், மார்ச் முதல், ஏப்ரல் வரையிலும், புளி சீஸன் இருக்கும்.கிருஷ்ணகிரி பழையபேட்டையில், புளி சீஸன் காலங்களில், வாரந்தோறும் வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில், புளி சந்தை கூடும். சந்தைக்கு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் புளி மட்டுமன்றி, அண்டை மாநிலங்களான, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்து, வியாபாரிகள், புளியை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.கிருஷ்ணகிரி பழையபேட்டை புளி சந்தையில் நிலவும் விலையை வைத்து தான், இந்தியாவின் பெரிய புளி சந்தையான, ராஞ்சி மற்றும் ஜபல்பூர் புளி சந்தைகளில், விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டு வட மாநிலங்களில், புளி விளைச்சல் குறைந்திருந்த நிலையில், கிருஷ்ணகிரியில், ஒரு கிலோ புளி, 20 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு, மாவட்டத்தில் புளி பம்பர் விளைச்சலாக உள்ள நிலையில், கிருஷ்ணகிரி புளி சந்தைக்கு வரத்து அதிகமாகியுள்ளது.நேற்று மட்டும், கிருஷ்ணகிரி புளி சந்தைக்கு, 75 ஆயிரம் கிலோவுக்கு மேல் புளி விற்பனைக்கு வந்தது. இதனால், ஒரு கிலோ புளி, 13 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. விலை குறைவால், புளி குத்தகை வியாபாரிகள் கலக்கமடைந்துள்ளனர்.போச்சம்பள்ளியை சேர்ந்த புளி குத்தகை வியாபாரி சிகாமணி கூறியதாவது:கடந்த காலங்களில், மரத்தில் இருந்து புளியை உலுக்க, நாள் ஒன்றுக்கு மரத்தில் ஏறும் ஆண்களுக்கு, 100 ரூபாயும், அதனை சேகரிக்கும் பெண்களுக்கு, 40 ரூபாயும் கூலியாக கொடுத்தோம்.தற்போது, தேசிய ஊரக வேலை திட்டத்தில்,

பெண்களுக்கே, 100 ரூபாயுக்கு மேல் கூலி கொடுப்பதால், எவரும் புளி உலுக்கும் வேலைக்கு வருவதில்லை. ஆண்களுக்கு, 300 ரூபாயும், பெண்களுக்கு, 200 ரூபாயும் கூலியாக கொடுக்கிறோம்.இந்நிலையில், புளி விலை குறைந்துள்ளதால், குத்தகை வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட புளி விற்பனையாகாமல் தேக்கமடைந்துள்ளதும், விலை குறைவுக்கு காரணமாகும்.இவ்வாறு அவர் கூறினார்.

## கோழிக்கு வெள்ளை கழிச்சல் நோய்கால்நடைத்துறை நீண்ட தூக்கம்

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் நிலவும் வெயிலால், நாட்டு கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் பரவி வருகிறது. ஆலோசனை தர வேண்டிய கால்நடைத்துறை தொடர்பு கொள்ளவே முடியாததால், மக்கள் விரக்தியில் உள்ளனர்.தமிழகத்தில் நாமக்கல், ஈரோடு ஆகிய இரு மாவட்டத்தில், மொத்தம் எட்டு கோடி, கறிக்கோழி, நாட்டுக்கோழி மற்றும் முட்டை கோழிகள் உள்ளன. தினமும் கோடிக்கணக்கான ரூபாய்க்கு வர்த்தகம் நடக்கிறது.பல்வேறு நோய் தாக்குதலில் இருந்து அனைத்து வகையான கோழிகளையும் காப்பாற்ற, ஈரோடு, நாமக்கல் மாவட்டத்தில் கோழி நோய் ஆராய்ச்சிக்கூடம் அமைந்துள்ளது. கோழி பண்ணைகளை பார்வையிட்டு, தக்க நேரத்தில் கோழி இன நோய்கள் குறித்து ஆராய்ந்து, பண்ணையாளர்களுக்கு தகுந்த யோசனைகள் வழங்குவது. கோழி பண்ணைகளில் நவீன தொழில் நுணுக்க யுக்திகளை கையாள பயிற்சியளிப்பதும் தான், கோழி ஆராய்ச்சிக் கூடத்தின் நோக்கம்.ஈரோடு மாவட்டத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பில் பெரும்பாலானோர் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது, கோடையில் நாட்டுக் கோழிகளை தாக்கும் வெள்ளைக்கழிச்சல் நோய் அதிகமாக பரவி வருவதால், பண்ணையாளர்கள் அதிருப்தியில் உள்ளனர். இந்நோயால், உடல் எடை குறைந்து, கோழி இறப்பு அதிகரித்ததால், நன்கு வளரும் முன்பே நாட்டுக்கோழியை விற்பனை செய்யும் முயற்சியில் பண்ணையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.இதுகுறித்து கால்நடைத்துறை கோழிநோய் ஆராய்ச்சி கூட உதவி இயக்குனர் ராமலிங்கம் கூறியதாவது:பொதுவாக கோடை காலத்தில் வெள்ளை கழிச்சல் நோய் பரவும். இதற்கு வேக்ஸின் (தடுப்பூசி) போட்டால், எந்த நோயும் தாக்காது. ஒவ்வொரு சனிக்கிழமையும் கால்நடைத்துறை மருத்துவமனையில், வேக்ஸின் போடப்படுகிறது. கோழி வளர்ப்பவரும், பண்ணையாளர்களும் இதனை பயன்படுத்தி, லாபத்தை பெருக்கி கொள்ளலாம், என்றார்.கோழி வளர்ப்போர் கூறியதாவது:சீசனுக்கு ஏற்ப கோழிகளுக்கு

நோய் வருகிறது. பிற விலங்குகளுக்கு நோய் வந்தால், ஒரு வாரம் முதல், பத்து நாட்களுக்கு மேல் கூட அவை தாங்கும்.கோழிகளுக்கு நோய் வந்தால், மாலையில் மருந்து வைத்துவிட்டு, அதிகாலை பார்த்தால், பண்ணையில் பாதி கோழி இறந்துவிடும், மீதக்கோழியை காப்பாற்றுவது சிரமமாகும். எனவே, சூழலுக்கு ஏற்ப, கால்நடைத்துறையினரும், கோழி ஆராய்ச்சி கூடத்தினரும் யோசனைகளை வழங்கியும், மருந்துவ உதவிகளையும் செய்ய வேண்டும், என்றனர்.

## தொடர்ந்து வரும் வங்கி நோட்டீஸ்: கரும்பு விவசாயிகள் போராட முடிவு

ஈரோடு: வங்கிக் கடன் வாங்கிய விவசாயிகளுக்கு நோட்டீஸ் இனி வராது, என ஆலை நிர்வாகம் உத்தரவாதம் வழங்கிய நிலையில், தொடர்ந்து வங்கிகள் நோட்டீஸ் அனுப்புவதால், தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர், நாளை (5ம் தேதி) ஆலை முன்பாக தொடர் முழக்க போராட்டத்தை அறிவித்துள்ளனர்.ஈரோட்டில், தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம், சக்தி சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் கோபிநாத் தலைமையில், தொடர் முழக்க போராட்டத்துக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது.பொருளாளர் அய்யாவு, மாவட்ட பொருளாளர் முத்துபழனிச்சாமி ஆகியோர் உடனிருந்தனர். கூட்டத்தில் கோபிநாத் பேசியதாவது: கலெக்டர் தலைமையில் நடந்த, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம், ஆலையின் பணப்பற்றில், 85 சதவீதம் விவசாயிகளுக்கும், 15 சதவீதம் ஆலையை தொடர்ந்து நடத்த செலவிடப்படும்.வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை, 20 கோடி ரூபாயில், ஃபிப்ரவரி மாதம், 10 கோடி ரூபாய், மார்ச் மாத இறுதிக்குள், 10 கோடி ரூபாய் செலுத்தப்படும். வங்கியில் இருந்து, கடன் பெற்ற விவசாயிகளுக்கு நோட்டீஸ் வராமல் பார்த்துக் கொள்ளப்படும். வறட்சியால் காய்ந்து வரும் கரும்புகளை, உடனடியாக வெட்ட நடவடிக்கை எடுக்கப்படும், என தெரிவித்தனர்.ஆனால், விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய, 85 சதவீத பணப்பற்றில், 20 சதவீதத்தை மட்டும், விவசாயிகளுக்கு வழங்கி, விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்ததாக, மாவட்ட நிர்வாகத்துக்கு பொய்யான தகவலை தெரிவிக்கின்றனர்.

காய்ந்து வரும் கரும்பை வெட்டாமல், வெட்டிய கரும்புக்கு உடனே பில் போடாமல், பணப்பற்று வரும்போது, பில் போட்டு அதில் இருந்து, 15 நாட்களுக்கு பின் விவசாயிக்கு பணப்பட்டுவாடா செய்கின்றனர்.கடந்த, நவம்பர் மாதம் துவங்கி, மூன்று மாதம் விவசாயிகளுக்கு கரும்புக்கான பணம் வழங்கப்படவில்லை. நடப்பாண்டு அரவைக்கு வெட்டுக்கூலி, வாடகை நீங்கலாக, டன்னுக்கு, 3,500 ரூபாய் வழங்க வேண்டும்.விவசாயிடம் பிடித்தம் செய்த, வங்கிக்கான பணத்தை உடனடியாக கட்டி, வங்கி நோட்டீஸ் வருவதை உடனே தடுக்க வேண்டும். நீரின்றி காய்ந்த கரும்புகளை உடனே வெட்ட வேண்டும். ரங்கராஜன் குழுவின் பரிந்துரையை மத்திய அரசு

அமல்படுத்தக்கூடாது என்ற கோரிக்கையை வலியுறுத்தி, நாளை, சக்தி சர்க்கரை ஆலை முன்பாக தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடத்தப்படும், என தெரிவித்தார்.

## எலுமிச்சை வரத்து சரிவால் விலை உயர்வு

ஈரோடு: நடப்பாண்டு பருவமழை பொய்த்து, எலுமிச்சை உற்பத்தி பாதித்து, வரத்து கணிசமாக குறைந்து விட்டது. கோடையில் வெயில் தலைகாட்டி உள்ள நிலையில், தேவை அதிகரிப்பால் மூட்டைக்கு, ஆயிரம் ரூபாய் வரை உயர்ந்துள்ளன.திருச்சி, திண்டுக்கல், நெல்லை, புளியங்குடி, சங்ககிரி, கிருஷ்ணகிரி மற்றும் ஆந்திராவில் அதிக பரப்பில் விவசாயிகள் எலுமிச்சை உற்பத்தி செய்கின்றனர். இங்கிருந்து மாநிலம் முழுவதும் விவசாயிகள் விற்பனைக்கு அனுப்புகின்றனர்.கடந்த ஓராண்டுகளாக பருவமழை பொய்த்தால், தமிழகத்தில் உற்பத்தி கணிசமாக குறைந்துவிட்டது. ஆண்டு முழுவதும் கோவில் விசேஷங்கள், வீட்டு சுபகாரியங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும், எலுமிச்சை பயன்பாடு அதிகம் உள்ளது.எலுமிச்சை பழத்தில் விட்டமின்-சி, நீர் சத்து போன்றவை அதிகம் உள்ளது. அனைத்து பழ ரகங்களை விட, குறைந்த விலையில், கிடைப்பதால் கோடையில் நல்ல வரவேற்பு உள்ளது.தற்போது, தமிழகத்தில் இருந்து வரத்து குறைந்து, ஆந்திர மாநிலத்தில் இருந்து வரத்தாகிறது.
ஆனால், போக்குவரத்து செலவு, கோடை சீஸன், தேவை அதிகரிப்பால், விலை மூட்டைக்கு, ஆயிரம் ரூபாய் வரை உயர்ந்துள்ளது, என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.
எலுமிச்சை வியாபாரி ஆறுமுகம் கூறியதாவது:தமிழகம் மற்றும் ஆந்திரா பகுதியில் இருந்து ஈரோடு பெரிய மார்க்கெட்டுக்கு வாரத்துக்கு, இரண்டு லோடு வரை எலுமிச்சை வரத்தானது, பாதியாக குறைந்து விட்டது. தமிழகத்தில் உற்பத்தி பாதிப்பால், வரத்து கணிசமாக குறைந்து விட்டது.ஆந்திர மாநிலங்கில் இருந்து அதிகமாக விவசாய மற்றும் நாட்டு எலுமிச்சை வரத்தாகிறது.நாட்டு எலுமிச்சை சிறியதாகவும், சாறு அதிகமாக கிடைக்கும். விவசாய எலுமிச்சை பெரியதாகவும், பழச்சாறு குறைந்து, தோல் தடிமனாக இருக்கும்.நடப்பாண்டு, பருவமழையின்றி, பனிப்பொழிவு, வெயிலால், செடியிலேயே விவசாய எழுமிச்சை பழுத்து விடுகிறது.
நாட்டு எழுமிச்சையும் பச்சை நிறமாக, தரம் குறைவாக விற்பனைக்கு வருகிறது. இந்நிலையில், வரத்து குறைந்து, தேவை அதிகரித்துள்ளதால், விலையும் உயர்ந்துள்ளது.
நாட்டு எலுமிச்சை, (2,000 எண்ணிக்கை அடங்கிய) ஒரு மூட்டை, சென்றாண்டு, 6,000 ரூபாய்க்கு விற்றது, 6,800 ரூபாய்க்கும், விவசாய எலுமிச்சை, 5,800 ரூபாய்க்கு விற்றது, 6,800 ரூபாய்க்கு விற்க்கப்படுகிறது.
ஆனால், தேவைக்கேற்ப வரத்து இல்லை. விலை அதிகம் என்பதால், விற்பனையும் இல்லாமல், இத்தொழிலை சார்ந்த வியாபாரிகள் பாதிப்படைந்துள்ளனர்.
ஏப்ரல் முதல் கோடை வெயில் தாக்கத்துவங்கினால், அதிக அளவில் ஜூஸ், கரும்பு சாறு தயாரிக்க எலுமிச்சை பயன்பாடு அதிகரிக்கும் என்பதால், அப்போது தேவையும், விலையும்

அதிகரிக்க வாய்ப்புள்ளது. தவிர, பிற மாவட்டங்களில் இருந்து வரத்தை பொறுத்து விலையில் ஏற்ற, இறக்கம் இருக்கும், என்றார்.

## பருத்தி ஏற்றுமதிக்கு தடை வேண்டுமென :வங்கி கடன் திரும்ப செலுத்த அவகாசம் தேவை

ஈரோடு: "பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிக்க வேண்டும். மத்திய அரசு நூலை அத்தியாவசி பொருட்கள் சட்டத்தின் கீழ் கொண்டு வரவேண்டும்' என தமிழ்நாடு விசைத்தறி சம்மேளனம் (பெடக்சில்) தலைவர் மதிவாணன் கூறினார்.தமிழ்நாடு விசைத்தறி சம்மேளனம் சார்பில் ஈரோட்டில் அவசர கூட்டம் நடந்தது. தலைவர் மதிவாணன் தலைமை வகித்து பேசியதாவது:பருத்தி நூல் விலை கடுமையாக உயர்கிறது. தற்போது கண்டிக்கு, 4,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. மத்திய அரசு தாராளமாக பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிக்க வேண்டும்.இதற்கு பதிலாக துணியாக அல்லது ஆடையாக ஏற்றுமதி செய்ய அனுமதிக்கலாம். இதனால் அரசுக்கு அன்னிய செலவாணி கிடைக்கும்.ரக ஒதுக்கீடு சட்டத்தின்கீழ், 11 ரகமாக குறைக்கப்பட்டுள்ளது. இதில், வேஷ்டி, சேலை, துண்டு, லுங்கி மற்றும் சர்டிங் போன்ற முக்கி ரகங்கள் இடம்பெறுகின்றன. விசைத்தறியில் இந்த ரகங்கள் எல்லாம் அதிகமாக தயாரிக்கப்படுகிறது.ஆனால், இந்த ரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்யக் கூடாது. அதை மீறும் பட்சத்தில் கடும் தட்டணைக்கு ஆளாகப்படும் என அதிகாரிகள் மிரட்டுகின்றனர். தமிழக அதிகாரிகளும் அதை தீவிரமாக செயல்படுத்துகின்றனர். எனவே, இந்த ரக ஒதுக்கீடு சட்டத்தை திரும்பப்பெற வேண்டும்.இந்தியா பருத்தி உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் முதலிடத்தில் உள்ளது.

இத்தொழில் மேலும் திறம்பட நடத்த வளர்ச்சி திட்டம் தேவை. உற்பத்திக்கான தொழில் நுட்பத்தில், கம்யூட்டர் டிசைனிங் மையம், நூல் விநியோக மையங்கள், விசைத்தறி சேவை மையங்கள் அமைக்க வேண்டும்.விசைத்தறிக்கு தனி இயக்குனரகம் ஏற்படுத்த வேண்டும். கர்நாடக மாநிலத்தில் செயல்படுகிறது. எனவே, தமிழகத்தில், ஜவுளி அமைச்சகத்தில் விசைத்தறி துறைக்கென தனி வாரியம் ஏற்படுத்த வேண்டும்.பட்ஜெட்டில் கைத்தறி கடனுக்கு, 6 சதவீதம் குறைத்துள்ளது. வங்கி கடனை விரிவுபடுத்த வேண்டும். அரசு அமைப்புச்சாரா நிறுவனங்களின் தொழிற்சாலைக்கும், தொழிலாளர்களுக்கும் உதவும் வகையில் ஒருங்கிணைந்த சமூக பாதுகாப்பு உதவி திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.

மத்திய அரசு, நூலை அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் கீழ் கொண்டு வரவேண்டும். இதனால், நூல் விலை உயர்வை கட்டுப்படுத்த முடியும்.

மின்வெட்டு, நூல் விலை உயர்வால், உற்பத்தி திறன் குறைகிறது. கூடுதல் துணி உற்பத்தியை செய்ய முடிவதில்லை.விசைத்தறி தொழிலாளர்களுக்கு தினசரி கூலி, நெய்யல் துணிக்கு ஏற்ப

சரியான கூலி கிடைப்பதில்லை. விசைத்தறி தொழிலாளர்கள் வங்கியில் வாங்கிய கடனை, திருப்பி செலுத்த, இரண்டு ஆண்டு அவகாசம் தேவை.
இவ்வாறு அவர் கூறினார்.ஈரோடு மாவட்ட அனைத்து தொழில், வணிக சங்க கூட்டமைப்பு தலைவர் சிவநேசன், ஆயத்த ஆடை தலைவர் சுப்பிரமணி, பெடக்சில் முன்னாள் துணை தலைவர் மாரப்பன், தற்போதைய துணை தலைவர் கருணாநிதி, சோமனூர் வேட்டி, சேலை உற்பத்தியாளர்கள் சங்கம் தலைவர் அழகிரிசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

## தேயிலையை பாதுகாக்க பாக்கு சருகுகள்

கூடலூர்:கூடலூர் பகுதியில் வெயிலின் தாக்கத்திலிருந்து தேயிலை செடிகளை பாதுகாக்க, காய்ந்த பாக்கு சருகுகள் பயன்படுத்தப்படுகின்றன.கூடலூர் பகுதியில் தற்போது வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தொடரும் வெப்பத்தின் தாக்கத்தால், தேயிலை மகசூல் பாதிக்க துவங்கியுள்ளது.வெப்பத்தின் தாக்கத்திலிருந்து தேயிலை செடிகளையும், நிலத்தையும் பாதுகாக்க, தேயிலை செடிகளுக்கு நடுவே "காய்ந்த பாக்கு சருகுகளை' பயன்படுத்த துவங்கியுள்ளனர்.இது குறித்து விவசாயிகள் கூறுகையில், "எந்த ஆண்டும் இல்லாத வகையில், இந்த ஆண்டு வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. கோடை மழை பெய்யாததால், ஏப்ரல் மே மாதத்தில் இதன் தாக்கம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதிலிருந்து தேயிலை செடிகளை பாதுகாக்க, முன்னெச்சரிக்கையாக "பாக்கு சருகுகளை' பரப்பி வருகிறோம்' என்றனர்.

## மானியம் பெற விண்ணப்பிக்கலாம்

கூடலூர்:"தேயிலை வாரியம்' வழங்கும் மானிய தொகை பெற இம்மாத இறுதிக்குள் விண்ணப்பிக்கலாம்.தேயிலை வாரிய உறுப்பினர் கோஷிபேபி கூறுகையில் ""தேயிலை வாரியம் மூலம், தாழ்த்தப்பட்ட விவசாயிகளின் தேயிலை தோட்டம் பராமரிப்புக்காக ஏக்கருக்கு 4,000 ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

பட்டா இல்லாத விவசாயிகள் மானிய தொகை பெற, தேயிலை வாரிய விண்ணப்பத்துடன் வக்கீலிடம் (நோட்டரி) பெறப்பட்ட சான்று இணைக்க வேண்டும்.அதே போன்று, 25 தாழ்ந்தப்பட்ட விவசாயிகள் கொண்ட குழுவுக்கு, பசும் தேயிலை ஏற்றி செல்ல சொந்த வாகனம் வாங்க, தேயிலை வாரியம் 50 சதவீதம் மானிய வழங்கிறது; அதிக தாழ்த்தப்பட்ட தேயிலை விவசாயிகள் உள்ள பகுதியில், 100 சதவீதம் மானியத்தில் "தேயிலை கொள்முதல் செட்' அமைத்து தர உள்ளது.இத்திட்டங்களின் பயனை பெறுவதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் இறுதிக்குள், தேயிலை வாரிய அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்," என்றார்.

## பப்பாளியில் அதிக மகசூல் பெறும் வழி

வாலாஜாபாத்:"பப்பாளி உயர் ரக தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, அதிக மகசூல் பெறலாம்' என, தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் அனிலாகிங்ஸி தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

கோ 1, கோ 2, கோ 3, கோ 5 மற்றும் ரெட்லேடி ஆகிய விதைகள் களிமண் பூமிக்கும், சமவெளி பூமிக்கும் உகந்ததாகும்.

ஒரு ஹெக்டேருக்கு 200 கிராம் விதை போதுமானது. இந்த விதைகளை நாற்றாங்கல் முறையை பயன்படுத்தாமல், குழித்தட்டு நாற்றாங்கள் முறையில், நாற்று விட வேண்டும். இதற்காக ஒரு குழித் தட்டினை தேர்வு செய்து, அவற்றில் மக்கிய தென்னை நார்கழிவினை நிரப்பவேண்டும்.

இடைவெளி

அதன் பின்னர் ஒவ்வொரு குழித்தட்டிலும் ஒவ்வொரு விதையை போட வேண்டும். இந்த குழித்தட்டுகளை ஈர மூட்டத்தை மூன்று

நாட்கள் வைத்திருக்க வேண்டும்.

பின்னர், செடி 45 நாட்கள் நன்கு வளர்ச்சியடைந்த பின் செடிகளை, நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை நன்கு உழுது சமன் செய்யவேண்டும்.

இரண்டு மீட்டர் இடைவெளி அளவில், ஒரு ஹெக்டேருக்கு 2,500 குழிகளை எடுத்து அவற்றிற்கு தொழு உரமிட்டு செடிகளை நடவு செய்யவேண்டும்.

நடவிற்கு பின்னர் வாரத்திற்கு ஒரு முறை தண்ணீரை பாய்ச்ச வேண்டும். இவற்றில் ஆண் செடிகளை நீக்கி விடவேண்டும்.

ஒவ்வொரு செடிக்கும் தழை, மணி மற்றும் சாம்பல் சத்தினை தலா 50 கிராமினை கலந்து மேலுரமிட வேண்டும். செடிகள் பூக்க ஆரம்பிக்கும் போது, 15 முதல் 20 பெண்

செடிகளுக்கு ஒரு ஆண் செடியை விடவேண்டும்.

நாற்றாங்களில் இருந்து நூற்புழு தாக்குதலை தடுக்க, ஒரு பாலிதீன் பையில் ஒரு கிராம் கார்போபியூரான் 3ஜி குருணை மருந்தினை இடவேண்டும்.

நோய் அபாயம்

செடியின் மேல் பாகத்தை சுற்றி தண்ணீர் தேங்கி நின்றால், இந்நோய் பரவும். இந்த நோய் தாக்கிய செடிகள் வாடி இறந்துவிடும். இவற்றை கட்டுப்படுத்த 0.1 சத போர்டேக் கலவை அல்லது 0.2 மயில் துத்தம் கரைசலை வேர்களில் நனையுமாறு ஊற்றவேண்டும்.

இவற்றை 15 நாட்கள் இடை

வெளியில் 2 அல்லது 4 முறை

உபயோகிக்க வேண்டும். பப்பாளி காய்களின் தோள் சற்றே மஞ்சள்

நிறமாக வரும்போது அறுவடை செய்யவேண்டும்; 30வது மாதம் முதல் அறுவடை செய்யலாம். இதன் மூலம் ஒரு ஹெக்டேருக்கு 200 டன் வரையில் அறுவடை செய்யலாம்.

இவ்வாறு அனிலா கிங்ஸி
தெரிவித்தார்.

### எள் செடிகள் அறுவடைக்கு தயார்

சின்னசேலம்:சின்னசேலம் பகுதியில் பயிரிடப்பட்ட எள் செடிகள் நன்கு வளர்ந்து அறுவடைக்கு தயாராக உள்ளது.
சின்னசேலம் பகுதியில் எலவடி, பூசப்பாடி, பாண்டியங்குப்பம் பகுதியில் இந்த ஆண்டு 200 ஏக்கரில் எள் செடிகள் பயிரடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் அதிகம் தண்ணீர் தேவைப்படாத எள் பயிரை அதிகம் பயிர் செய்தனர்.
எஸ்.வி.பி.ஆர்.,1, வெள்ளை எள் ரகம் இப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ளது. மூன்று மாத பயிரான எள் செடிகள் கடந்த ஜனவரி மாதம் பயிரிடப்பட்டு தற்போது நன்கு வளர்ந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.
ஹெக்டருக்கு 800 முதல் 900 கிலோ வரை மகசூல் கிடைக்கும் என்றும், 100 கிலோ மூட்டை 10,000 ரூபாய் முதல் 11,000 வரை விலை விற்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

### கால்நடைக்கு உணவாகும் மலிவு விலை தக்காளி

கச்சிராயபாளையம்:கச்சிராயபாளையம் பகுதியில் குவிக்கப்பட்டு விற்பனையாகாத தக்காளிகள் கால்நடைகளுக்கு உண வாகும் நிலை உள்ளது.
கச்சிராயபாளையம் பகுதியில் 50க்கும் மேற்பட்ட காய்கறி கடைகள் உள்ளது. கடைகளில் மொத் தமாக தக்காளி பழங்கள் விற்னைக்கு வாங்கப்படுகிறது. அத்துடன் வேன் மற்றும் பழைய இரும்பு வியாபாரிகளால் வீதி, வீதி யாக குறைந்த விலைக்கு தக்காளி விற்கப்படுகிறது.
அதிகளவில் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனையாகாமால் எஞ்சிய தக்காளி பழங்களை குப்பை வண்டிகளில் கொண்டு செல்ல சாலையில் வைக்கின்றனர்.
அப்போது மேய்ச்சலுக்கு செல்லும் கால்நடைகள் தக்காளி பழங்களை உண்ணுகின்றன.
கால்நடைகள், தக்காளி பழங்களை அதிக அளவு உண்ணும் போது, அமில நோய் தாக்கும் அபாயம் ஏற்பட லாம் என கால் நடை மருத் துவர்கள் எச்சரித்துள்ள நிலையில், தக்காளி பழங் களை மாடுகள் உண்பதை தடுக்க அதன் உரிமை யா ளர்கள் எச்சரிக் கையோடு இருப்பது அவசியம்.

### பேப்பர் கப், பாக்கு மட்டை தட்டுதயாரிப்பு குறித்து இலவச பயிற்சி

நாமக்கல்: "ஆண்கள், பெண்களுக்கு, பேப்பர் கப், பிளேட் மற்றும் பாக்குமட்டை தட்டு தயாரித்தல் குறித்த இலவச பயிற்சி முகாம், மார்ச் இரண்டாவது வாரத்தில் துவங்குகிறது' என, இந்தியன்

வங்கி சுயவேலைவாய்ப்பு நிறுவன இயக்குனர் ராஜீ தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:நாமக்கல், இந்தியன் வங்கி சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் சார்பில், மார்ச் இரண்டாவது வாரத்தில், ஆண்கள், பெண்களுக்கான பேப்பர் கப் மற்றும் பிளேட், பாக்குமட்டை தட்டு தயாரித்தல் குறித்த இலவச பயிற்சி முகாம் துவங்குகிறது. இப்பயிற்சி, பத்து வேலை நாட்களுக்கு நடக்கிறது.பேப்பர் கப், பிளேட் மற்றும் பாக்குமட்டை தட்டு தயாரித்தல் குறித்த தொழில் நுணுக்கம், திட்ட அறிக்கை தயாரித்தல், சந்தைப்படுத்துதல் குறித்து பயிற்சி அழிக்கப்படுகிறது. ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், தொழில் முனைவோர் பயிற்சியில் பங்கேற்கலாம்.இதில், 18 வயதுக்கு மேல், 45 வயதுக்குள் உட்பட்ட எழுத படிக்க தெரிந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விருப்பமுள்ள தகுதி வாய்ந்தோர், நேரிலோ அல்லது அருகில் உள்ள இந்தியன் வங்கி கிளைகளிலோ விண்ணப்பம் பெற்று பயன்பெறலாம். தொடர்புக்கு, 04286 221004, 89030 13980 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## கோழி பண்ணையாளர்களுக்கு ரூ. 87 லட்சம் நிவாரண உதவி

திண்டிவனம்: தானே புயலில் பாதிக்கப்பட்ட கோழி பண்ணை உரிமையாளர்களுக்கு 87 லட்சம் ரூபாய் நிவாரண தொகையை அமைச்சர் மோகன் வழங்கினார்.விழுப்புரம் மாவட்டம் முழுவதிலும், தானே புயலில் பாதிக்கப்பட்ட கோழிப் பண்ணை உரிமையாளர்களுக்கு, கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் நிவாரண தொகை வழங்கும் நிகழ்ச்சி திண்டிவனம் ஜே.வி.எஸ் மகாலில் நடந்தது.கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். எம்.எல்.ஏ., க்கள் டாக்டர் அரிதாஸ், நாகராஜன், நகராட்சி சேர்மன் வெங்கடேசன் முன்னிலை வகித்தனர்.
தானே புயலில் பாதிக்கப்பட்ட 311 கோழிபண்ணை உரிமையாளர்களுக்கு 86 லட்சத்து 84 ஆயிரத்து 725 ரூபாய் மதிப்பிலான காசோலை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் 20 பேருக்கு 46 ஆயி ரம் ரூபாய்க்கான காசோலை, உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 6 பேருக்கு 6 ஆயிரம் ரூபாய் உள்பட மொத்தம் 87 லட்சத்து 36 ஆயிரத்து 725 ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் மோகன் வழங்கினார்.
டி.ஆர்.ஓ., பிருந்தாதேவி, ஆர்.டி.ஓ., மீனா பிரியதர்ஷினி, கால்நடைதுறை மண்டல இணை இயக்குனர் அழகரசன், உதவி இயக்குனர் குருவைய்யா, தனி தாசில்தார் சத்தியமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர். தாசில்தார் கோபால்சாமி நன்றி கூறினார்.

## கோழிக்கு வெள்ளை கழிச்சல் நோய்கால்நடைத்துறை நீண்ட தூக்கம்

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் நிலவும் வெயிலால், நாட்டு கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் பரவி வருகிறது. ஆலோசனை தர வேண்டிய கால்நடைத்துறை தொடர்பு கொள்ளவே முடியாததால், மக்கள் விரக்தியில் உள்ளனர்.தமிழகத்தில் நாமக்கல், ஈரோடு ஆகிய இரு

மாவட்டத்தில், மொத்தம் எட்டு கோடி, கறிக்கோழி, நாட்டுக்கோழி மற்றும் முட்டை கோழிகள் உள்ளன. தினமும் கோடிக்கணக்கான ரூபாய்க்கு வர்த்தகம் நடக்கிறது.பல்வேறு நோய் தாக்குதலில் இருந்து அனைத்து வகையான கோழிகளையும் காப்பாற்ற, ஈரோடு, நாமக்கல் மாவட்டத்தில் கோழி நோய் ஆராய்ச்சிக்கூடம் அமைந்துள்ளது. கோழி பண்ணைகளை பார்வையிட்டு, தக்க நேரத்தில் கோழி இன நோய்கள் குறித்து ஆராய்ந்து, பண்ணையாளர்களுக்கு தகுந்த யோசனைகள் வழங்குவது. கோழி பண்ணைகளில் நவீன தொழில் நுணுக்க யுக்திகளை கையாள பயிற்சியளிப்பதும் தான், கோழி ஆராய்ச்சிக் கூடத்தின் நோக்கம்.ஈரோடு மாவட்டத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பில் பெரும்பாலானோர் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது, கோடையில் நாட்டுக் கோழிகளை தாக்கும் வெள்ளைக்கழிச்சல் நோய் அதிகமாக பரவி வருவதால், பண்ணையாளர்கள் அதிருப்தியில் உள்ளனர். இந்நோயால், உடல் எடை குறைந்து, கோழி இறப்பு அதிகரித்ததால், நன்கு வளரும் முன்பே நாட்டுக்கோழியை விற்பனை செய்யும் முயற்சியில் பண்ணையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.இதுகுறித்து கால்நடைத்துறை கோழிநோய் ஆராய்ச்சி கூட உதவி இயக்குனர் ராமலிங்கம் கூறியதாவது:பொதுவாக கோடை காலத்தில் வெள்ளை கழிச்சல் நோய் பரவும். இதற்கு வேக்ஸின் (தடுப்பூசி) போட்டால், எந்த நோயும் தாக்காது. ஒவ்வொரு சனிக்கிழமையும் கால்நடைத்துறை மருத்துவமனையில், வேக்ஸின் போடப்படுகிறது. கோழி வளர்ப்பவரும், பண்ணையாளர்களும் இதனை பயன்படுத்தி, லாபத்தை பெருக்கி கொள்ளலாம், என்றார்.கோழி வளர்ப்போர் கூறியதாவது:சீசனுக்கு ஏற்ப கோழிகளுக்கு நோய் வருகிறது. பிற விலங்குகளுக்கு நோய் வந்தால், ஒரு வாரம் முதல், பத்து நாட்களுக்கு மேல் கூட அவை தாங்கும்.கோழிகளுக்கு நோய் வந்தால், மாலையில் மருந்து வைத்துவிட்டு, அதிகாலை பார்த்தால், பண்ணையில் பாதி கோழி இறந்துவிடும், மீதக்கோழியை காப்பாற்றுவது சிரமமாகும். எனவே, சூழலுக்கு ஏற்ப, கால்நடைத்துறையினரும், கோழி ஆராய்ச்சி கூடத்தினரும் யோசனைகளை வழங்கியும், மருந்துவ உதவிகளையும் செய்ய வேண்டும், என்றனர்.

### வறட்சியை சமாளிக்க ஊராட்சிகளில் "போர்வெல்'

காரைக்குடி: வறட்சியை சமாளிக்கும் விதத்தில், ஊராட்சிகளில் "போர்வெல்' அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது, ஊராட்சிகளின் கட்டாய கடமையாகும். விசைப்பம்புகள், கைப்பம்புகள், பொதுக்குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நீர் ஆதாரம் இருந்தால், வீட்டு இணைப்பு மூலம் தண்ணீர்

வழங்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றிய பொது நிதி, மாநில நிதி, வரியிலிருந்து பெறப்படும், உபரிநிதி, சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் நிதி, குடிநீர் வடிகால் வாரிய நிதி, ஊரக உட்கட்டமைப்பு திட்டத்தின் நிதி உள்ளிட்ட பல்வேறு நிதிகள் மூலம், குடிநீர் வசதிக்கான கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.இந்த ஆண்டு வழக்கத்தை விட அதிக வறட்சியால், நீராதாரங்களான, ஆறு, குளம், ஏரி உள்ளிட்டவை வறண்டு காணப்படுகின்றன. கிராம ஊராட்சிகளில், வறட்சி, மின்தடை உள்ளிட்டவையால், தற்போதே முழுவதுமாக குடிநீர் சப்ளை செய்ய முடியவில்லை. ஏப்ரல், மே மாதங்களில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது.இதையடுத்து, ஊராட்சிகளில் மற்ற பணிகளை ஒதுக்கி வைத்து விட்டு, குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கான பணிகளை செய்ய அதன் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி, ஊராட்சிகளில், புதிய போர்வெல்களை அமைத்து, கோடை காலத்தில், குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## நாட்டின் பால் உற்பத்தி13.37 கோடி டன்னாக அதிகரிக்கும்

புதுடில்லி:நடப்பாண்டில், நாட்டின் பால் உற்பத்தி, 13.37 கோடி டன்னாக அதிகரிக்கும் என, மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் ராஜ்ய சபாவில் தெரிவித்தார். இது, கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை (12.79 கோடி டன்) விட, 4 சதவீதம் அதிகமாகும்.நாட்டின் பல்வேறு மாநிலங்களில், கடும் வறட்சியால், வைக்கோல் மற்றும் பசும்புல் போன்றவற்றின் உற்பத்தி, வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலும், பால் உற்பத்தி, அதிகரிக்கும் என, மாநில அரசுகள் அளித்துள்ள புள்ளிவிவரங் களின் அடிப்படையில், மேற்கண்ட கருத்தை அமைச்சர் தெரிவித்தார்.விவசாயிகள், வைக்கோல் மற்றும் பசும் புல் தவிர, கறவை மாடுகளுக்கு ஊட்டச்சத்து மிகுந்த தீவனங்கள் மற்றும் தானியங்களை உணவாக அளிக்கின்றனர். கால்நடைகளுக்கு முக்கிய தீவனமாக உள்ள வைக்கோல், போதிய அளவிற்கு கிடைக்காததால், மத்திய, மாநில அரசுகள் பசும் புல் வகைகளை அதிகளவில் உற்பத்தி செய்யும் வகையில், இதற்கான விதைகளை அளித்து வருகின்றன என, அமைச்சர் மேலும் கூறினார்.

## பருத்தி நூலிழை விலை உயர்வு



திருப்பூர்:பருத்தி விலை கேண்டிக்கு (356 கிலோ), 4,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளதால், திருப்பூரில் உள்ள நூற்பாலைகள், நூலிழை விலையை, கிலோவுக்கு, 7 ரூபாய் வரை உயர்த்தியுள்ளன.திருப்பூரில் உள்ள பனியன் உற்பத்தி நிறுவனங்கள், திண்டுக்கல், ஈரோடு மற்றும் உள்ளூர் பகுதி நூற்பாலைகளில் இருந்து, நூலிழையை கொள்முதல் செய்கின்றன.மின் வெட்டு காரணமாக, ஜெனரேட்டர் மூலம் நூலிழை உற்பத்தி செய்யப்படுவதால், நிறுவனங்களின் உற்பத்தி செலவு உயர்ந்துள்ளது. இதனால், நூலிழை விலை கிலோவுக்கு, 5 முதல் 7 ரூபாய் வரை உயர்த்தப்பட்டது.

தற்போது, பருத்தி பருவம் துவங்கிஉள்ளதால், பருத்தி ஏற்றுமதி அதிகரித்து உள்ளது. இதனால், உள்நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டு, பருத்தி விலை கேண்டிக்கு, 4,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.கேண்டி, 34,500 ரூபாயாக இருந்த பருத்தி தற்போது, 38,500 ரூபாயாக அதிகரித்து உள்ளது. டீசலை தொடர்ந்து, பருத்தி விலை அதிகரிப்பால், திருப்பூரில் உள்ள நூற்பாலைகள், கடந்த, 1ம் தேதி முதல் நூலிழை விலையை, மீண்டும் கிலோவுக்கு, 5 ரூபாய் உயர்த்தியுள்ளன. 191 ரூபாயாக இருந்த, 20ம் நம்பர் நூல், 196 ரூபாய், 199 ஆக இருந்த, 24ம் நம்பர் நூல், 204, 211 ஆக இருந்த, 30ம் நம்பர் நூல், 216, 226 ஆக இருந்த, 34ம் நம்பர் நூல், 231, 234 ஆக இருந்த, 40ம் நம்பர் நூல், 239 ரூபாய் என, உயர்த்தப்பட்டு உள்ளது.

இதுகுறித்து, "டாஸ்மா' தலைவர் அப்புக்குட்டி கூறியதாவது:இந்திய நூற்பாலைகளுக்கு நடப்பு பருவத்தில் (அக்., - செப்.,) 3.10 கோடி பருத்தி பொதிகள் தேவைப்படும். புதிய பருத்தி பருவம் துவங்கிய உடனே, 75 லட்சம் பருத்தி பொதிகளை, ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. 40 லட்சம் பொதிகள் ஏற்கனவே ஏற்றுமதியாகிவிட்டன.

அதிக விலையை எதிர்பார்த்து, இந்திய பருத்தி கழகம், 35 லட்சம் பருத்தி பொதிகளை இருப்பு வைத்துள்ளது. ஏற்றுமதி அதிகரிப்பால், உள்நாட்டில் பருத்திக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு கேண்டிக்கு, 4,000 ரூபாய் உயர்ந்துள்ளது. பருத்தி விலை உயர்ந்துள்ளதால், தற்போது, திருப்பூரில் மட்டும் நூலிழை விலை உயர்ந்துள்ளது. விரைவில், தமிழகம் முழுவதும் இதன் விலை, உயரும்.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

4.03.2013 A.M

## 58 ஆயிரம் ஏக்கர் பயிரை காக்க பாசனத்திற்கு நீர் கேட்டு விவசாயிகள் மறியல்



குளித்தலை: 58 ஆயிரம் ஏக்கர் பயிர்களை காக்க பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடக்கோரி குளித்தலையில் நேற்று மறியலில் ஈடுபட்ட 67 விவசாயிகளை போலீசார் கைது செய்தனர். கரூர் மாவட்டம் குளித்தலை பகுதியில் தென்கரை வாய்க்கால், கட்டளை மேட்டு வாய்க்கால் உள்ளது. இந்த வாய்க்கால் பாசனத்தை நம்பி 58,000 ஏக்கரில் கரும்பு, நெல், வாழை, வெற்றிலை ஆகியவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேட்டூரில் தண்ணீர் வரத்து குறைந்து விட்டதால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழக அரசு 4 ஆண்டுகளுக்கு முன்பு அறிவித்தபடி 6,000 கன அடி தண்ணீர் மேட்டூர் அணையில் இருந்து திறந்து விட வேண்டும். ஆனால், இன்று வரை மாயனூர் தடுப்பு அணைக்கு அந்த தண்ணீர் வந்து சேரவில்லை. இந்நிலை குறித்து அதிகாரிகளிடம் கேட்டபோது, குடிநீருக்காக 4,000 கன அடி தண்ணீராக குறைத்து வருகிறது. இதனால் விவசாயத்துக்கு தண்ணீர் திறந்து விட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தனர். தண்ணீர் திறக்காததால் குளித்தலை பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட நெல், கரும்பு, வாழை கருகி பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே தமிழக அரசு மாயனூரில் இருந்து தென்கரை வாய்க்காலிலும், கட்டளை மேட்டு வாய்க்காலுக்கும் தண்ணீர் திறந்து விட வேண்டும் எனக்கோரி நேற்று முன்தினம் இரவு முதல் மருதூர் பேரூராட்சி தலைவர் சம்பத் தலைமையில் விவசாயிகள் குளித்தலை பொதுப்பணித்துறை அலுவலக த்தை

முற்றுகையிட்டு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் விவசாய சங்க தொழிலாளர் முன்னேற்ற சங்கம் சண்முகம், முன்னாள் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பா ளர் கந்தசாமி, கவுன்சிலர் பிருந்தாவன் வடிவு, கோபால் உள்பட 100க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இதை தொடர்ந்து இரவு 10 மணிக்கு தாசில்தார் செல்வராஜ் வந்து விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அவர் கூறியதை விவசாயிகள் ஏற்காததால் முற்றுகை போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கும் விவசாயிகளை சந்திக்க எந்த ஒரு உயர் அதிகாரிகளும் வராததால், நேற்று காலை 11 மணிக்கு மருதூர் பேரூராட்சி தலைவர் சம்பத் தலைமையில் குளித்தலை திமுக ஒன்றிய செயலாளர் சூரியனூர் சந்திரன், முன்னாள் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் கந்தசாமி, மருதூர் சீனிவாசன் உள்பட 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்போது சம்பவ இடத்திற்கு வந்த ஆர்டிஓ சிவசவுந்திரவள்ளி, பேச்சுவார்த்தை நடத்தாததை கண்டித்து விவசாயிகள் பெரிய பாலத்தில் இருந்து ஊர்வலமாக சுங்க வாயில் வரை சென்றனர். சுங்கவாயில் சென்றதும் சாலையின் நான்கு புறமும் விவசாயிகள் அமர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டனர். இதை தொடர்ந்து சாலை மறியலில் ஈடுபட்ட 67 விவசாயிகளை டிஎஸ்பி (பொ) இளங்கோவன், இன்ஸ்பெக்டர் முகமது இத்ரிஸ் ஆகியோர் கைது செய்தனர்.

## தண்ணீர் வரத்து குறைந்து விட்டது மேட்டூர் நீர்மட்டம் 30 அடிக்கு சரிவு



மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து கடந்த 4 நாட்களாக விநாடிக்கு 6,000 கனஅடி நீர் திறக்கப்பட்டதால் நீர்மட்டம் மீண்டும் 30 அடிக்கும் கீழ் சரிந்துள்ளது. இந்நிலையில், நேற்று அதிகாலை முதல் நீர்திறப்பு விநாடிக்கு 300 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. காவிரி டெல்டா பகுதியில் கருகிய நெற்பயிரை காப்பாற்ற, தமிழகத்துக்குரிய காவிரி நீரை கர்நாடகம் திறந்து விட உத்தரவிடக்கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு இந்த மாத தொடக்கத்தில் மனு தாக்கல்

செய்தது. இதனை விசாரித்த உச்சநீதிமன்றம் 2.44 டிஎம்சி நீரை தமிழகத்திற்கு வழங்க உத்தரவிட்டது.

அதன்படி, கடந்த மாதம் 9ம் தேதி கேஆர்எஸ் அணையில் இருந்து திறக்கப்பட்ட காவிரி நீர் 15ம் தேதி மேட்டூர் அணையை வந்தடைந்தது. இதனால், அணையின் நீர்மட்டம் உயரத்தொடங்கியது. 8 நாட்கள் விநாடிக்கு 4,000 கனஅடிக்கும் அதிகமாக நீர் வந்ததால் நீர்மட்டம் 5 அடி அளவிற்கு உயர்ந்தது. பின்னர், நீர் திறப்பை கர்நாடகம் நிறுத்தியதால் நீர்வரத்து படிப்படியாக குறைந்தது. அணையின் நீர்மட்டம் 34 அடியை தொட்ட நிலையில் கடந்த 27ம் தேதி காலை 7 மணி முதல் மேட்டூர் அணையில் இருந்து விநாடிக்கு 6,000 கனஅடி நீர் திறக்கப்பட்டது. இதனால், நீர்மட்டம் தினமும் ஒரு அடி வீதம் சரிந்து வந்தது. இந்நிலையில், நேற்று அதிகாலை 3.30 மணி முதல் அணையில் இருந்து நீர்திறப்பு 300 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 268 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையின் நீர்மட்டம் 29.46 அடியாக இருந்தது. நீர் இருப்பு 7.31 டிஎம்சி. கடந்த 4 நாட்களில் நீர்மட்டம் 4.5 அடி சரிந்து மீண்டும் 30 அடிக்கும் கீழ் சென்றுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

4.03.2013 A.M

## ஜனவரி வரையிலான 10 மாதங்களில் அளவு–மதிப்பு அடிப்படையில் முந்திரி பருப்பு ஏற்றுமதி வீழ்ச்சி

கொச்சி

நடப்பு நிதி ஆண்டில், ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான 10 மாதங்களில் மதிப்பு மற்றும் அளவின் அடிப்படையில் முந்திரி பருப்பு ஏற்றுமதி சரிவடைந்துள்ளது. இறக்குமதியாகும் கச்சா முந்திரிக் கொட்டைகளின் விலை அதிகமாக உள்ள நிலையில், சர்வதேச சந்தையில் முந்திரி பருப்பு விலை குறைந்துள்ளதால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர்.

### 76,000 டன் ஏற்றுமதி

ஏப்ரல்–ஜனவரி மாத காலத்தில் ரூ.3,089 கோடி மதிப்பிற்கு சுமார் 76,000 டன் முந்திரி பருப்பு ஏற்றுமதியாகி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் ரூ.4,390 கோடிக்கு 1.32 லட்சம் டன் முந்திரி பருப்பு ஏற்றுமதியாகி இருந்தது. ஆக, அளவின் அடிப்படையில் 16 சதவீதமும், மதிப்பின் அடிப்படையில் 17 சதவீதமும் ஏற்றுமதி குறைந்துள்ளது.

முந்திரி பருப்பு நுகர்வு அதிகமாக உள்ள அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தேவைப்பாடு குறைந்ததால் ஏற்றுமதி சரிவடைந்துள்ளதாக முன்னணி ஏற்றுமதியாளர் அனு கேஷ்யூஸ் நிறுவனத்தின் அனு எஸ்.பிள்ளை தெரிவித்தார். ஏற்றுமதியாகும் முந்திரி பருப்புக்கு குறைவான விலை கிடைத்து வரும் நிலையில், இறக்குமதி செய்யப்படும் கச்சா முந்திரியின் விலை அதிகமாக உள்ளது. இதுவும் ஏற்றுமதியாளர்களுக்கு இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

நமது ஏற்றுமதியாளர்களுக்கு ஆண்டுக்கு மொத்தம் 14 லட்சம் டன் கச்சா முந்திரி தேவைப்படுகிறது. இதில் 60 சதவீதம் இறக்குமதி வாயிலாகவே பூர்த்தி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலம் வரை தான்சானியாவில் இருந்து இறக்குமதி செய்து வந்த இந்திய நிறுவனங்கள், தற்போது மேற்கு ஆப்பிரிக்காவில் மகசூல் பருவம் தொடங்கியுள்ளதால் அங்கிருந்து கச்சா முந்திரியை வாங்க தொடங்கியுள்ளனர்.

தற்போது ஒரு பவுண்டு (சுமார் அரை கிலோ) முந்திரி பருப்புக்கான ஏற்றுமதி விலை 3.30 முதல் 3.50 டாலர் வரை உள்ளது. இறக்குமதி செலவினத்தை ஈடு செய்ய வேண்டுமானால் 3.60 டாலருக்கு அதிகமான விலை கிடைக்க வேண்டும் என ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர். இந்த நிலையில், முந்திரி சாகுபடியில் முன்னிலை வகிக்கும் ஐவரி கோஸ்ட் மற்றும் கானா ஆகிய நாடுகளில் சீசன் தொடங்கி விட்டதால் கச்சா முந்திரி விலை குறையும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் மட்டும் 71,610 டன் கச்சா முந்திரி இறக்குமதியாகி உள்ளது. இது, 2011 ஜனவரி மாதத்தை விட ஏறக்குறைய இரண்டு மடங்கு அதிகமாகும்.

**வியட்நாம், பிரேசில்**

நம் நாட்டில், கடந்த சில ஆண்டுகளில், கச்சா முந்திரியை இறக்குமதி செய்து பதப்படுத்துவோருக்கும், முந்திரி பருப்பு ஏற்றுமதி செய்வோருக்கும் வர்த்தகம் செழிப்பாக இருந்தது. ஆனால் அண்மைக் காலமாக வியட்நாம், பிரேசில் ஆகிய நாடுகள் இந்தியாவில் மலிவு விலையில் முந்திரி பருப்பை விற்பனை செய்வதால் உள்நாட்டில் இத்துறையில் ஈடுபட்டுள்ளோருக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

## கோழி தீவனத்தில் வைட்டமின் 'சி' மருந்துகளை சேர்க்கவேண்டும் வானிலையில் தகவல்

நாமக்கல்,

கோழி தீவனத்தில் வைட்டமின் சி கொண்ட மருந்துகளை சேர்க்க வேண்டும் என வானிலையில் தெரி விக்கப்பட்டு உள்ளது.

வானிலை அறிக்கை

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் 2 நாட்கள் நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறி யிருப்பதாவது:–

அடுத்த 2 நாட்களுக்கான வானிலையில் வானம் தெளிவாகவும், மழை அற்றும் காணப்படும். காற்று முறையே 2 கி.மீ., 3 கி.மீ. வேகத்தில் கிழக்கு திசையில் இருந்து வீசும். வெப்ப நிலையை பொறுத்த வரையில் அதிகபட் சமாக 98.6 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 69.8 டிகிரியாகவும்

இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட் சமாக முறையே 62, 70 சதவீதமாகவும், குறைந்தபட்ச மாக 35, 39 சதவீதமாகவும் இருக்கும்.

சிறப்பு வானிலை

பகல் வெப்பம் உயர்ந்து வருவதாலும், கோடை காலத்தின் தொடக்கத்தில் இருப்பதாலும் கோழி களிடையே லேசான வெப்ப அயற்சியும், அதன் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடும் காணப்படுகிறது. இதனை எதிர்கொள்ளும் வகையில் தீவனத்தில் வைட்ட மின் சி மருந்துகளை சேர்த்து வரவேண்டும்.

கடந்த வாரம் கோழியின நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட கோழி கள் பெரும்பாலும், ராணிக் கெட் மற்றும் மேல் மூச்சுக்குழாய் நோய்களினால் இறந்து இருப்பது தெரியவந்து உள்ளது. மேலும் தீவன மூலப்பொருட்கள் மற்றும் குடிநீரில் ஈகோலை நோய் கிருமிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. ஆகவே பண்ணையாளர்கள் உரிய குடிநீர் பராமரிப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அந்த அறிக் கையில் கூறப்பட்டு உள்ளது.

## மக்களை தேடி நகராட்சி திட்டத்தில் கொளிஞ்சிவாடியில் மாடுகள் தண்ணீர் குடிக்க குட்டை அமைக்க நடவடிக்கை

தாராபுரம்,

மக்களை தேடி நகராட்சி என்ற நிகழ்ச்சியில் கொளிஞ்சிவாடியில் மாடுகள் தண்ணீர் குடிக்க சிறிய குட்டை அமைக்க நடவடிக்கை எடுப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

மக்களை தேடி நகராட்சி திட்டம்

பொதுமக்கள் தங்களது குறைகளை தெரியப்படுத்த நகராட்சிக்கு படை எடுத்து வந்து அதிகாரிகளை சந்தித்து மனு கொடுத்து வந்தனர். ஆனால் தற்போது மக்களை தேடி நகராட்சி என்ற புதிய திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு வார்டுக்கும் நகராட்சி அதிகாரிகள் சென்று மக்களை சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற்று அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்து வருகிறார்கள். அந்த அடிப்படையில் தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட கொளிஞ்சிவாடியில் 'மக்களை தேடி நகராட்சி' திட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு நகராட்சி தலைவர் கலாவதி ஞானசேகரன் தலைமை தாங்கினார். ஆணையாளர் சரவணக்குமார் முன்னிலை வகித்தார்.

குடிநீர் பிரச்சினை

முகாமில் கலந்து கொண்ட பொதுமக்கள், 'கொளிஞ்சிவாடியில் குடிநீர் முறையாக வருவது இல்லை எனவும், எனவே குடிநீர் வினியோகத்தை முறைப்படுத்த வேண்டும். உப்புநீர் கிடைக்க சின்டெக்ஸ் தொட்டிஅமைக்க வேண்டும்' என கோரிக்கை வைத்தனர். மேலும் கொளிஞ்சிவாடி பகுதி மக்களின் பொருளாதாரம் கால்நடை வளர்ப்பு எனவும், எனவே ஆடு, மாடுகள் தண்ணீர் அருந்துவதற்கு பொதுவான குட்டை அமைத்து தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

தண்ணீர் குட்டை

இந்த கோரிக்கையை உடனே ஏற்று கொளிஞ்சிவாடியில் குடிநீர் சின்டென்ஸ் குடிநீர் அமைக்கப்படும், மாடுகள், ஆடுகள் தண்ணீர் குடிக்க பொதுவான குட்டை உடனே அமைக்கப்படும், மாடுகளை கட்டுவதற்கு மாட்டுப்பட்டி(கொட்டகை) அமைக்கப்படும் என்று ஆணையாளர் சரவணக்குமார் உறுதி அளித்தார். இந்த நிகழ்ச்சியில் கவுன்சிலர்கள், நகராட்சி அதிகாரிகள், சுகாதார ஆய்வாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கூடலூர் பகுதியில் அழிந்து வரும் விவசாய நிலங்கள்

கூடலூர்,

கூடலூர் பகுதியில் விவசாய நிலங்கள் நாளுக்கு நாள் அழிக்கப்பட்டு வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இதனால் எதிர்காலத்தில் உணவு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

நீர்பாசன திட்டங்கள் இல்லை

இந்தியாவின் முதுகெலும்பாக திகழ்வது வேளாண்மை தொழில். எப்போது வேளாண்மை துறையில் தன்னிறைவு பெறுகிறதோ அன்றைக்கு இந்தியா தலை சிறந்த நாடாக விளங்கும் என அண்ணல் காந்தியடிகள் கூறி உள்ளார். ஆனால் அவரின் கூற்றுக்கு மாறாக விவசாயம் பல்வேறு காரணங்களால் அழிந்து வருகின்றன. ஒரு நாட்டுக்கு இன்றியமையாத அடிப்படை தேவைகளில் ஒன்று நீர் பாசனம். இதனால் தான் காமராஜர் தனது ஆட்சி காலத்தில் தமிழகத்தின் குறிப்பிட்ட இடங்களில் அணைகளை கட்டி வைத்து விவசாயத்தை செழித்தோங்க வைத்தார்.

அவர் காலத்தில் கட்டிய அணைகளை வைத்து தான் இன்று வரை தமிழக விவசாய பணிகள் நடைபெற்று கொண் டிருக்கின்றன. அதன் பிறகு வந்த காலகட்டத்தில் மழைக் காலத்தில் வீணாகும் நீரை சேமித்து வைக்கும் வகையில் புதிய அணைகள் கட்டப்படவில்லை. இதனால்

தண்ணீருக்காக அண்டை மாநிலங்களை எதிர்பார்த்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது.

<u>அழிக்கப்படும் விவசாய நிலங்கள்</u>

தற்போது பருவமழையும் பொய்த்து விட்டதால் தமிழகத்தில் கடும் வறட்சி நிலவுகிறது. இதனால் டெல்டா மாவட்டங்கள் உள்பட அனைத்து பகுதிகளிலும் விவ சாயம் பெரிதளவு பாதிக்கப்பட்டு உள்ளன. இந்த பிரச்சினை ஒருபுறம் இருந்தாலும், மற்றொரு புறம் விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் தேயிலை எஸ்டேட்டுகளில் விடுதிகளுக்காக கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின் றன. இதனால் தேயிலை பயிர் செய்து உள்ள நிலப்பரப்புகளும் குறைந்து கொண்டே வருகின்றன.

கூடலூர் பகுதியில் பருவ மழை சரிவர பெய்யாததால் நெல் நடவு விவசாயம் அடியோடு பாதிக்கப்பட்டு உள்ளது. இனி வரும் காலங்களில் விவசாயம் செய்ய முடியாது என்ற எண்ணத்தில் விவசாயிகள் தங்களது நிலத்தை விற்று விடுகின்றனர். இதனால் விவசாய நிலங்கள் பிரிக்கப்பட்டு வீட்டுமனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

<u>கடும் சட்டங்களால் பாதிப்பு</u>

குறிப்பாக தனியார் வன பாதுகாப்பு சட்டம், புலிகள் காப்பக விரிவாக்க திட்டம் உள்ளிட்ட பல்வேறு கடும் சட்டங்களால் கூடலூர் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதனால் பட்டா உள்ள விவசாய நிலங்களுக்கு கிராக்கி ஏற்பட்டு உள்ளது. இதனை பயன்படுத்தி கொண்டு விவசாய நிலங்கள் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

கூடலூர் பகுதியில் விளையக்கூடிய விவசாய பொருட்கள் இப்பகுதி மக்க ளின் உணவு தேவைகளை ஓரளவுக்கு பூர்த்தி செய்து வந்த நிலையில் விவசாய பணிகள் அழிக்கப்பட்டு வருவதால் எதிர்காலத்தில் உணவு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. எனவே தமிழக அரசு, கேரள அரசை போல் விவசாய நிலங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது நல அமைப்புகள் வலியுறுத்தி உள்ளது.

## விருதுநகர் மாவட்டத்தில் வரும் நிதியாண்டில் ரூ.3,595 கோடி வங்கிகள் மூலம் கடன் வழங்க வாய்ப்பு நபார்டு வங்கி அறிக்கையில் தகவல்

விருதுநகர்,

விருதுநகர் மாவட்டத்தில் வரும் நிதியாண்டில் வங்கிகள் மூலம் ரூ.3595 கோடி முன்னுரிமை கடன்கள் வழங்க வாய்ப்பு உள்ளதாக நபார்டு வங் கியின் அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

<u>கடன் திட்ட அறிக்கை</u>

விருதுநகர் மாவட்டத்தில் வரும் நிதியாண்டில் விவசாயம், தொழில்துறை மற்றும் சேவை துறை உள்ளிட்ட முன் னுரிமை துறைகளுக்கு கடன் வழங்குவதற்கான திட்ட அறிக்கை நபார்டு வங்கி மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் பல்வேறு துறை களுக்கு கடன் வழங்க வேண் டிய வாய்ப்பு பற்றி ஆய்வு செய்து அதற்காக தேவைப் படும் நிதி ஒதுக்கீடு பற்றியும் கூறப்பட்டுள்ளது. இந்த கடன் திட்ட அறிக்கையினை வங்கி யாளர் ஆய்வு கூட்டத்தின் போது கலெக்டர் ஹரிஹரன் வெளியிட்டார்.

<u>ரூ.3595 கோடி</u>

இந்த அறிக்கையின் படி விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த திட்டங்களுக்கு ரூ.1539 கோடியே 57 லட்சம் கடன் வழங்க வாய்ப்புள்ளதாக கூறப் பட்டுள்ளது. இதில் பயிர் கடனுக்கு ரூ.995 கோடியே 83 லட்சமும், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் களுக்கு குறுகிய கால கடன் வழங்க ரூ.543 கோடியே 74 லட்சமும் கடன் வழங்கலாம் என கூறப்பட்டுள்ளது. இந்த கடன் தொகை மொத்த கடன் திட்ட தொகையில் 43 சத வீதம் ஆகும்.

சிறு–குறு தொழில் துறைக்கு ரூ.1545 கோடியே 94 லட்சம் கடன் வழங்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவும் மொத்த கடன் திட்ட தொகையில் 43 சதவீதம் ஆகும். இதரசேவைத்துறை வேலைவாய்ப்புத்துறைக ளுக்கு 509 கோடியே 60 லட்சம் கடன் வழங்க வாய்ப் புள்ளதாக மதிப்பிடப்பட்டு உள்ளது. மொத்த கடன் திட்ட தொகையில் இது 14 சதவீதம் ஆகும்.

<u>நடவடிக்கை</u>

நபார்டு வங்கியின் இந்த கடன் திட்ட அறிக்கையின் அடிப்படையாக கொண்டு மாவட்ட முன்னோடி வங்கி வரும் நிதியாண்டிற்கானகடன் திட்டம் தயாரித்து உறுப்பினர் வங்கிகளுக்கு இந்த கடன் திட்டத்தினை செயல்படுத்த முறைப்படி நிதி ஒதுக்கீடு செய்து தரும் என முன்னோடி வங்கி அதிகாரி ஒருவர் தெரி வித்தார். இந்த பணி வரும் ஏப்ரல் மாதத்தில் செயல் பாட்டுக்கு வரும் என்றும் அவர் கூறினார்.

## மா மரங்களில் தத்துப்பூச்சி தாக்குதலை தடுப்பது எப்படி? பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் விளக்கம்

ஸ்ரீவில்லிபுத்தூர்,

மா மரங்களில் தத்துப் பூச்சி தாக்குதலை தடுப் பது குறித்து வேளாண்மை அதிகாரி விளக்கம் அளித்துள்ளார்.

### மாமரங்கள்

ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசி ரியர் மற்றும் தலைவர் அமலா பாலு ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தமிழகத்தில் தென் மாவட்டங் களை சேர்ந்த மா சாகுபடியாளர்கள் மாமரங் களில் தற்போது பூத்து உள்ளதா? மா இலைகள் பகல் வெயிலில் பளபள வென்று எண்ணை தேய்த்து விட்டதுபோல் மினுமினுப்பாக உள்ளதா? என கவனிக்க வேண்டும். அப்படி இலைகள் மினு மினுப்பு டனும், பிசுபிசுப்பாக வும் காணப் பட்டால் இந்த இலைகளுக்கு மேலுள்ள பூங்கொத்துகளை உற்று நோக்கினால் சிறிய பழுப்பு நிறமுள்ள, பக்கவாட்டில் நகரக்கூடிய தத்துப் பூச்சிகளை காணலாம். மா தத்துப்பூச்சிகள் முட்டைகளை இளங்குருத்துகள், பூ கொத் துகள், இலைகளில் துளைத்து வைக்கின்றன. இதனால் முட்டை உட் செலுத்தப் பட்ட பகுதிக்கு மேற்பகுதி வாடி கருகிவிடும். மேலும் முட்டையில் இருந்து வெளிவரும் இளம் குஞ்சுகள் மற்றும் முழு வளர்ச்சியடைந்த தத்துப்பூச்சிகள் இலைக் குருத்து மற்றும் பூங்கொத்து களின் சாற்றினை உறிஞ்சுகின்றன. இதனால் பூங் கொத்து கள் வலு இழக்கின் றன. தாக்குதல் தீவிரப் பட்ட £ல் பூ மொட்டு கள், பூக்கள், இளம் பிஞ்சுகள் காய்கள் உதிர்கின்றன.

### குறைக்கலாம்

மேலும் இந்த இந்த பூச்சிகள் வெளியேற்றும் தேன்பாகு போன்ற கழிவுகள் இலைகளின் மீது படிந்து கரும்பூசணம் வளர்ந்து ஒளிச்சேர்க்கை பாதிக்கப்படுகிறது. நெருக்கி நடப்பட்ட தோப்புகளில் சேதம் விரைந்து பரவும். மல்கோவா, நீலம்,செந்தூரம் போன்ற ரகங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாவதுண்டு. பெங்களூரா மற்றும் சப்பட்டை எனப்படும் பங்கனப்பள்ளி அல்லது பனேசன் ரகங்களில் தாக்குதல் சற்று குறைந்து காணப்படும் இதை கட்டுப்படுத்த மா நடவு செய்யும்போதே சிபாரிசு செய்யப்படும் இடை வெளியில் மரங்களை நட வேண்டும். முடிந்தவரை பாதிப் புக்கு உள்ளான பூங் கொத்து களை காவத்து செய்து அகற்றி எரித்து அழிக்க வேண்டும்.

காய்ந்த சருகுகளை தீயிட்டு புகைமூட்டம் செய்து தாக்குதலை குறைக்கலாம். ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒன்றரை மில்லி பாசலோன் அல்லது ஒருகிராம் அசிப்பேட் அல்லது ஒன்றே கால் மில்லி மானேகுரோட்டாபாஸ் வீதம் கலந்து தெளிப்பான் மூலம் தெளித்து கட்டுப்படுத்தலாம். மருந்து கரைசல் இலைகளில் நன்கு படிவதற்காக சாண் டோ விட், இன்ட்ரான் போன்ற திரவ சோப்புகளில் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் மருந்து கரைசலுக்கு அரைமில்லி வீதம் சேர்த்து கலக்கி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.